(நியூ பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர், ஆசிரியை, மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களின் படைப்பு)

(தனிச்சுற்று) விற்பனைக்கு அன்று

# நியூ பாரத் சிறகுகள்

NEW BHARATH SIRAKUGAL

ஆண்டு-2 ஆகஸ்ட்-2025 இதழ்-3 மாதஇதழ் Year - 2 August - 2025 Issue-3




# 19ஆம் ஆண்டு மாநில அளவில் தரைப்பந்து போட்டியில் நம் பள்ளி மாணவர்கள் சாதனை

"உனக்காக வாழ்கிறேன்
என்று பிறர் சொல்வதைவிட
உன்னால் வாழ்கிறேன்
என்று ஒருவரையாவது
சொல்ல வை"

-அன்னை தெரசா








**Rtn Dr N. முரளிதரன்** MA,MPhil

முதல்வர்

## நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி

37- புதுத்தெரு, திருவாரூர்

கைபேசி : 9865142666

அன்பு வாசகர்களுக்கு.

நியூ பாரத் சிறகுகள் மாத இதழானது தொடர்ந்து சிறப்புடனும், புதுமையுடனும் வெளியாவதற்கு துணைநிற்கும் பெற்றோர்கள் துணை முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றி.

நம் இதழானது தடையின்றி தொடர்ந்து வெளியாக தங்கள் படைப்புகளை பிரதி மாதம் 7ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்பும் படைப்புகளை திருத்தம் செய்யவோ, நிராகரிக்கவோ இதழ் ஆசிரியருக்கு உரிமை உண்டு என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசிரியரின் முடிவே இறுதியானது.

இதழாசிரியர்
**Rtn. DR. N. முரளிதரன்**
Email : newbharathsiragugal@gmail.com

## அடிப்படை கல்வி... வளமான வாழ்வு...

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது கல்விக்கு சமுதாயம் கொடுக்கும் அங்கீகாரம். குழந்தைப் பருவத்திலிருந்து சரியான வகையில் கல்வி புகட்டப்பட வேண்டும். இது பெற்றோரின் கடமை மட்டுமல்ல. சமுதாயத்தின் ஒட்டுமொத்த பொறுப்பாகும். இன்றைய சமூகத்திற்கு சரியான கல்வியைக் கொடுப்பதற்கு அரசும் உறுதுணையாக இருக்க வேண்டும். ஆசிரியர் நியமனம் மற்றும் நிர்வாக அமைப்புகள் ஆகியவை நிறைவேற தொடர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பள்ளிக் கல்விதான் ஒரு மாணவரின் ஆளுமையை நிர்ணயிக்கும். மாணவருடைய சிந்தனைத் திறனை வளர்க்கும் சுய சிந்தனையோடு ஒரு பொருண்மையை அலசி ஆராயும் அறிவாற்றல் கொண்டிருப்பது, இன்றைய நவீன உலகத்தில் வெற்றிபெற இன்றியமையாததாகும்.

சிறு வயதில் மொழிகளை உள்வாங்கும் சக்தி அதிகமாக இருக்கும். குழந்தைகள் விரைவாக மொழிகளைக் கற்கும் ஆற்றல் உடையவர்கள். இந்த ஆற்றலை வளர்ப்பது, பலவகையில் ஒருவரின் ஆளுமையை வலிமையாக்கும். நினைவாற்றல் அதிகரிக்கும். பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றலை உருவாக்கும். கற்பனை சக்தியை விரிவாக்கும், பல வேலைகளைச் சுலபமாகச் செய்யும், செயலாற்றுத் திறன் மேம்படும். கலாச்சார உணர்வு, கவனக் கூர்மை, அறிவாற்றல் திறன் போன்ற எண்ணற்ற நன்மைகள் உருவாகும்.

எனவேதான் முன்னோர்கள் “இளமையில் கல்” என்றும் “கற்கை நன்றே! கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” எனக் கூறிச் சென்றனர்.

**நா.பிரகதாம்பாள்**
*தாளாளர்*

**நியூ பாரத் சிறகுகள்**
மாணவர் மாதஇதழ் (தனிச்சுற்று)
விற்பனைக்கு அன்று.

ஆசிரியர் வெளியிடுபவர்
**Rtn. DR. N. முரளிதரன்,** M.A.,M.Phil.,B.Ed., D.Litt.,(USA)
திருமதி. **S. அருணா முரளிதரன்,** M.A.,M.Phil.,B.Ed.,

கௌரவ ஆசிரியர்கள்
திரு. **G. நாகராஜன்** H.M. (Rtd)
திருமதி. **N. பிரகதாம்பாள்,** B.A.,Correspondent

சிறப்பு சட்ட ஆலோசகர்
உயர்திரு. நீதியரசர் **Dr. V.R. பூபாலன்**
Tribunal Judge (Arbitration) District Judge (F)
All India Legal Advisor, Madurai.

சிறப்பு ஆசிரியர்கள்
திருமதி. **N. ராஜேஸ்வரி,** M.A.,B.Ed., ஆலோசகர்
திரு. **T.K. ஜெயப்பிரகாஷ்,** B.Sc.,M.A.,B.Ed., ஆலோசகர்
திரு. **D. முருகையன்,** M.A.,M.Phil.,B.Ed.,
திருமதி. **R. கமலா,** B.Sc.,B.Ed.,
திருமதி. **N. விஜயலெட்சுமி,** M.A.,B.Ed.,
திருமதி. **S. புவனேஸ்வரி,** B.A.,B.Ed.,
திருமதி. **V. கவிதா,** M.Sc.,B.Ed.,
திரு. **A. ராஜதுரை,** M.Sc.,M.Phil.,B.Ed.,
திரு. **S. சதீஷ்,** M.A.,B.Ed.,
**Rtn. AVC. கார்த்திக் (எ) கார்த்திகேயன்**
MMLM,M.A.,M.Phil.,M.S.W.,MBA.,PGDGL.,PGDTLS., PGDVLS.,CFTECH.,DCA.,BA.,B.Sc.,

இணை ஆசிரியர்கள்
திரு. **A. பழனிசாமி,** M.A.,B.Ed.,
திரு. **S. ஜெகதீஷ்** M.A.,B.Ed.,DCA., Tally.
திருமதி. **N. ராதிகா** B.Lit.,B.Ed.,

சட்ட ஆலோசகர்கள்
திரு. **M.K. ஸ்டாலின்,** B.A.,B.L.,
திரு. **A. அபினாஷ்,** B.Sc.,L.L.B.,
திரு. **S.K.L. கிருபா சங்கர்,** B.Com.,L.L.B.,

**COMPUTER DESIGN**
**M. மணிகண்டன்,** MCA.,PGDCA.,B.Ed.,
**P. தெட்சிணாமூர்த்தி,** DME.,BBA.,

**PHOTOGRAPHER : K. சக்திவேல்**

வடிவமைப்பு யாமீன் கிராபிக் 9080674353

**நியூ பாரத்**
**பதின்ம மேல்நிலைப் பள்ளி**
*37, புதுத்தெரு, திருவாரூர்*
newbharathsiragugal@gmail.com

# ஆர்வத்தை தூண்டி விடுபவரே சிறந்த ஆசிரியர்!



**திருமதி. S. அருணா முரளிதரன்,**
**துணை முதல்வர்**

**பள்ளி,** கல்லூரி, மற்றும் வாழ்க்கையின் அத்தியாயங்கள் - ஒவ்வொன்றிலும் ஆசிரியரின் தடம் பதிந்திருக்கும். ஆனால், உண்மையான ஆசிரியரை அடையாளம் காணும் அளவுகோல், அவர் எத்தனை பாடங்களை கற்றுத் தந்தார் என்பதில் அல்ல; அவர் தனது மாணவனின் உள்ளத்தில் எத்தனை கேள்விகளையும், தேடலையும், ஆச்சரியத்தையும் விதைத்தார் என்பதில் தான் இருக்கிறது.

ஒரு மாணவனுக்கு நேரடியாக அறிவை அளிப்பது, அவருக்கு ஒரு நாள் உணவளிப்பதைப் போன்றது. அது உடனடி தேவையைப் பூர்த்தி செய்யும், ஆனால் நிலைத்த பலனை தராது. ஆனால் அந்த மாணவன் "எப்படி? ஏன்? இன்னும் எப்படி மேம்படுத்தலாம்?" என்று சிந்திக்கத் தூண்டப்பட்டால், அவர் வாழ்நாளெல்லாம் அறிவைத் தேடும் பயணத்தில் இருப்பார். இதுவே சிறந்த ஆசிரியரின் அடையாளம்.

**உண்மையான கற்றலின் வேர்**

கற்றல் என்பது ஒரு விதையை நட்டது போல. நல்ல ஆசிரியர் அந்த விதையை வளர்த்து, நன்கு காத்து, பழம் காயும் வரை வழிகாட்டுவார். ஆனால் சிறந்த ஆசிரியர், மாணவன் தானே விதைகளை தேடி நட்டு வளர்க்கும் திறனை வளர்த்துக் கொடுப்பார்.

இதுவே "நான் உனக்கு மீன் கொடுப்பதில்லை; நீயே வலை வீச கற்றுக்கொள்" என்ற பழமொழியின் ஆழம்.

**வரலாற்றில் உள்ள உதாரணம்**

சாக்ரடீஸ் தனது மாணவர்களுக்கு நேரடி பதில் சொல்லாமல், தொடர்ந்து கேள்விகள் கேட்டு, அவர்கள் தாங்களே பதிலை கண்டு பிடிக்கச் செய்தார். இது சாக்ரடீஸ் முறை எனப்படும். அவரின் நோக்கம்-மாணவர்கள் பதிலை கேட்டு மனப்பாடம் செய்வதல்ல; பதிலைத் தேடும் ஆர்வம், சந்தேகம், சிந்தனை, மற்றும் விவாத திறனை வளர்ப்பதே.

அதனால் தான் அவர் வாழ்ந்த காலத்தைக் கடந்து, இன்றும் சிறந்த ஆசிரியராக போற்றப் படுகிறார்.

**ஒரு சிறுகதை**

ஒரு கிராமத்தில் அருண் என்ற சிறுவன் இருந்தான். படிப்பில் சாதாரணம், ஆர்வமில்லா தவன். ஆனால், அவரது அறிவியல் ஆசிரியர் ஒருநாள் ஒரு பழைய மணியைக் கிளாசில் கொண்டு வந்தார். "இது எப்படிச் சத்தமிடுகிறது என்று உனக்குத் தெரிகிறதா?" என்று அருணிடம் கேட்டார்.

அருண் தோளைச் சிலிர்த்து, "தெரியாது ஐயா" என்றான்.

"பாரு, இதை உடைத்து உள்ளே என்ன இருக்கிறது என்று காண்போம்" என்று ஆசான் சொன்னார். அந்த நாள்முதல் அருண், வகுப் பறையில் உள்ள எல்லாவற்றையும் "உடைத்து" அதன் உள்ளமைப்பைப் புரிந்துகொள்ள ஆரம்பித் தான். சில ஆண்டுகளில், அவன் ஒரு திறமையான இயந்திர பொறியாளராக வளர்ந்தான்.

அவரின் வெற்றியின் பின்னால்-ஒரு நாளில், ஒரு ஆசிரியர் எழுப்பிய ஒரு எளிய "ஏன்?" என்ற கேள்வியே இருந்தது.

**ஏன் இது முக்கியம்?**

*1.* நிலையான கற்றல் - ஆர்வம் கொண்ட மாணவர், ஒரு முறை கற்றது மறந்தாலும் மீண்டும் கற்றுக் கொள்வார்.

*2.* சுயமாக வளர்ச்சி - ஆசானின் வழிகாட்டு தலின்றி கூட, தானே ஆராய்ந்து முன்னேறுவார்.

*3.* புதுமை மற்றும் கண்டுபிடிப்பு - ஆர்வம் இல்லாமல், புதிய கண்டுபிடிப்புகள் சாத்திய மில்லை.

### இறுதியாக

பாடங்களை மனப்பாடம் செய்யச் செய்வதை விட, "நான் எப்படி தெரிந்து கொள்வது?" என்ற கேள்வியை மாணவனின் உள்ளத்தில் உருவாக்கு வதே கல்வியின் உச்சம்.

புத்தகத்தை மூடிய பிறகும், பாடம் முடிந்த பிறகும், ஆண்டுகள் கடந்த பிறகும், அந்த ஆர்வம் தொடர்ந்தால்-அவர் கற்றுக் கொடுத்தது முடிவடையவில்லை என்பதற்கே அது சான்று.

அந்த ஆர்வத்தின் தீப்பொறியை ஏற்றும் ஆசிரியரே-உண்மையான ஒளிவிளக்கு. ■

# பாரதியார் கவிதை வரிகள்...

பயந்து பணிந்து
மிரண்டது போதும் - இனி
தெளிந்து துணிந்து
மீண்டெழ வேண்டும்
மழலை மணம்
மாறாத உன்னை
மாற்றம் காண்போம் இனிமே...

அடுத்த அடியை நீ
எடுத்து வைத்தால்
ஆயிரம் கதவுகள்
திறந்திடும் உனக்கு
ஆடவர் திமிரும் அடங்கிடும்
விதி என்று தேங்கிவிடாமல்
வீரம் கொண்டு வெளியே வா பெண்ணே!

**வெ.ரக்ஷிதா, 7-இ**

# அழகு...!

சிரிக்கும்போது
முகம் அழகு
அன்பு காட்டும்போது
மனம் அழகு
நம்பிக்கை வரும்போது
வாழ்க்கை அழகு
நீ நீயாகவே இருக்கும்போது
எல்லாமே அழகு...

**டி. தமிழ்செல்வன், 7-அ**



**நண்பர்கள் அனைவருக்கும்**
**நற்காலை வணக்கம்**

சாதனைகள் அனைத்தும் வலிமையாலோ அறிவு கூர்மையாலோ அடையப் பட்டவைகள் அல்ல...

அவையனைத்தும் விடா முயற்சியினால் அடையப்பட்டவை.

மாற்றம் என்பது சொல் அல்ல செயல்..

மாற்றம் தானாக உருவாகாது; நாம் தான் உருவாக்க வேண்டும்.

மாற்றம்... முன்னேற்றம்...!!!!

விதையின் மாற்றமே வேர்...

நேற்றைய மாற்றமே இன்று...

சேமிப்பின் மாற்றமே முதலீடு...

அறியாமையின் மாற்றமே அறிவு...

தோல்வியின் மாற்றமே வெற்றி...

துன்பத்தின் மாற்றமே இன்பம்...

இரவின் மாற்றமே பகல்...

கோபத்தின் மாற்றமே அன்பு...

ஒலியின் மாற்றமே இசை...

நட்பின் மாற்றமே காதல்...

அழுகையின் மாற்றமே சிரிப்பு..

கருவறையின் மாற்றமே கல்லறை...

குழந்தையின் மாற்றமே மனிதன்...

நம்பிக்கையின் மாற்றமே தன்னம்பிக்கை...

கல்வியின் மாற்றமே நாட்டின் வளர்ச்சி...

முடியாதென்பதன் மாற்றமே முடியும்...

இப்படி பல மாற்றங்களுக்கு பிறகே நமது வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழும்.

எனவே தங்களின் நேரத்தின் ஒவ்வொரு நொடியிலும் நிகழ இருக்கும் மாற்றங்களுக்குத் தயாராக இருங்கள்..

மாற்றம்... முன்னேற்றம்..!!! மாற்றம் என்பது நம்மிடம் இருந்தே ஆரம்பம் ஆக வேண்டும்...!!

**- N.VIJAYALAKSHMI, Vice Principal**




# கற்க கசடற கல்வி

புலவர் **வீ. செல்வகணபதி,** M.A.,M.Ed.,M.Phil.,
முதுகலையாசிரியர், பணி நிறைவு, தேசிய மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டிணம்.

**ஒரு** மனிதனின் வாழ்க்கையில் மாணவப் பருவம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். மாணவப் பருவத்தில் ஒரு மாணவன் பெறுகின்ற கல்வியறிவும் கூடவே வளர்ந்து வரும் பண்பு நலன்களுமே அவனுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய காரணிகளாகும்.

கல்வியும் பயிற்சியும் செயல்பாடுகளும் மாணவனுடைய அறிதிறன் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை. அறிதிறன் வளர்ச்சி நிலைகளை துரிதப்படுத்த இயலாது. அதனால் ஆசிரியர் ஒவ்வொரு நிலை தேர்ச்சியையும் ஊக்குவிக்கத்தக்க அனுபவங்களை அமைத்துத் தர வேண்டும்.

ஒழுக்க வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் இணைந்தவை. சுமார் 11 ஆண்டு வயது அடையும்போதுதான் குழந்தையால் தன்னுடைய செயலை மதிப்பிட்டுப் பார்க்க முடியும்.

பள்ளிக்கூடம், பாடம், கற்பித்தல் முறைகள் ஆகியன அறிதிறன் வளர்ச்சிக்கு அடிப்படை தொடக்க நிலை குழந்தைகளுக்கு செயல் வழிக் கற்பித்தலும் இடைநிலை மாணவர்களுக்கு மாதிரிப் பொருட்கள் செய்து காட்டல் போன்றவை மூலம் கற்பித்தலும் உயர்நிலை மாணவர்களுக்கு சொற் சார்ந்த கற்பித்தல் முறைகளும் மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளை அளவில் சிறிய முதியவர்கள் என நினைக்கக்கூடாது. இவர்களின் சிந்தனை செயல்முறைகள் முதிர்ந்தவர்களின் நிலையில் இருந்து முழுவதுமாக வேறுபாடு உடையவை.

குழந்தைகள் தங்கள் வயதிற்கு ஏற்பட கிடைக்கும் அனுபவங்கள் மூலம் தாமாக எல்லாவற்றையும் கண்டறியும் முறையே சிறந்த கற்றல் முறையாகும்.

சில ஆண்டுகளாக குழந்தைகள் திசை மாறிப் போகிறார்கள் என்ற கருத்து மேலோங்கி வருகிறது. கல்வி கற்பதில் கவனக்குறைவும் ஈடுபாடு இல்லாமையும் அதிகரித்துவிட்டது.

குழந்தைகள் பிடிவாதம் நிறைந்தவர்களாக பெரியவர்களுக்கு மதிப்பளிக்கத் தெரியாதவர்களாகவும் உள்ளனர். ஒட்டுமொத்தமாக எல்லா குழந்தைகளையும் குறைசொல்ல இயலாது. வளர்ப்பு முறையில்தான் குறைகள் உள்ளன. களிமண்ணால் செய்யப்படும் பொம்மை அதைச் செய்பவனின் கையில் இருக்கிறது. அதுபோல குழந்தைகளின் எதிர்காலம் பெற்றோர் கையில்தான் உள்ளது.

அதற்கடுத்து சுற்றுச்சூழல். அதாவது சமுதாயம், பள்ளிக்கூடம், நண்பர்கள் என்று அந்தக் குழந்தையின் வட்டம் விரிவடையும் பொழுது பண்புகள், பழக்க வழக்கங்கள் புதிதாகத் தோன்றுகின்றன.

**“நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தற்**
**கினந்தியல்ப தாகும் அறிவு”**

வானத்தில் இருந்து விழுகின்ற மழைநீர் தூய்மையானதுதான். ஆனால் விழுகின்ற நிலத்திற்கு ஏற்ப நீர் மாறுபடுவதுபோல மக்களுடைய அறிவு சேர்கின்ற இனத்திற்கு ஏற்றவாறு மாறுபாடு அடையும்.

குழந்தைகள் பெற்றோர்களைச் சார்ந்து வாழும்பொழுது போலச் செய்தல் மூலம்

அவர்கள் நடக்கப் பழகுகிறார்கள். தான் கற்றுக்கொள்வதை வெளிப்படுத்த முயல் கிறார்கள். பிறக்கும் குழந்தைகள் நம்மைப் போலவே பண்புகளைப் பெறுகிறார்கள். நாம் அதில் குற்றம் காணும்பொழுது அதையும் அவர்கள் நம்மிடையே வெளிப்படுத்துகிறார்கள்.

நாம் பெற்றெடுக்கும் குழந்தை நலமாக வேண்டி தாய் பத்தியம் இருப்பதைப்போல் பெற்ற குழந்தை சிறப்பாக வளர, வாழ நமக்கு கட்டுப்பாடுகள் மிக மிக அவசியம்.

நாம் செய்கிற குற்றங்களை மறந்துவிட்டு, அவர்களையே குறை சொல்லிக்கொண்டு இருக்கக்கூடாது. நமது பிள்ளைகள் உயர் நிலை அடைய வேண்டும் என்று விரும்பினால் அதற்கு ஏற்றவாறு நமது வீட்டுச் சூழ்நிலையை அமைத்துக்கொடுக்க வேண்டியது நமது பொறுப்பு.

எந்நேரமும் தொலைக்காட்சியும், தொலை பேசியையும், பார்த்துக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் குழந்தைகளை படிக்கச் செய்வது சுலபமல்ல. கற்றல் தொடர்பான செய்திகளைக் கூட ஊடகம் மூலமாக செய்தல் கூட தவறான தாகிவிடும். ஆரம்பத்தில் இருந்தே புத்தகங்களின் மூலமே படிக்கப் பழகுவதுதான் சிறப்பானதாகும்.

பெற்றோர்கள் குழந்தைகளோடு நேரம் செலவிடுவதோடு கல்வி கற்றலில் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு குழந்தையின் வளர்ச்சியை சில காரணிகள் தீர்மானிக்கின்றன. பெற்றோர்களின் கடமை உணர்ச்சி, ஆசிரியரின் கற்பித்தல் மற்றும் கண்டிக்க, சமூக அக்கறை, கல்வி பாடத்திட்டம் என்பவனவாகும்.

ஆசிரியர்கள் இரண்டாம் நிலை பெற்றோர் என்று கூறுகிறோம். கனிவும், கடுமையும் தேவையான இடங்களில் வெளிப்படுத்தி சரியான வழிகாட்டியாக இருக்க வேண்டிய ஆசிரியர்களை மாணவனிடம் எதையும் கேட்கக்கூடாது என்று கட்டிப் போட்டுவிட்டோம். இந்நிலையில் மாணவர்கள் கேட்பாரின்றி, தண்டிப்பாரின்றி, பயமின்றி, கவலையின்றி, ஒழுக்கமின்றி, அறிவின்றி, யாருக்கும் பயனின்றி வளரத் தலைப்பட்டுவிட்டான்.

பெருகி வருகின்ற குற்றச் செயல்கள் உளவியல் ரீதியான சிக்கல்கள் தடுக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்றவாறு அன்பும், நட்புறவும், எளிமையும் நிறைந்த சூழ்நிலையை நமது குழந்தைகளுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும். கல்வித் திட்டம் மாணவர்களின் அறிவியலையும் கணிதத்தையும் மட்டுமே உறுதிப்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது. நமது பண்பாடு, கலாச்சாரங்கள், உறவு முறைகள் ஆகியவற்றை கற்பிப்பதாகவும் அமைய வேண்டும்.

உடல் உழைப்பு இழிவானது என்ற எண்ணத்தை மாற்ற வேண்டும். இதற்காகத்தான் நாட்டு நலப்பணித் திட்டத்தை வைத்து சமுதாயப் பணி ஆற்ற வேண்டும் என்பது கற்பிக்கப்படுகிறது.



பள்ளிகளில் சாரணர் இயக்கம், செஞ்சிலுவை இயக்கம், பசுமைப்படை இயக்கம் போன்றவற்றில் மாணவர்களை பங்குபெறச் செய்வது மனிதனாக வளரும் பொழுது பண்புநலன்களும் வளர வேண்டும் என்பதற்காகத்தான்.

"இளங்கன்று பயம் அறியாது" என்பது முதுமொழி. தேவையற்ற சில செயல்களில் ஈடுபடுவதில் நாட்டமும் வேகமும் மாணவப் பருவத்தில் உருவாவது இயற்கையான ஒன்று. ஆனால், எதிர்கால வாழ்க்கை, முன்னேற்றம், பெற்றோரின் எதிர்பார்ப்பு இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டால் நாம் நமது பாதையை நன்றாக வடிவமைத்துக்கொள்ளலாம். எந்த ஒரு மாணவனும் தனியாக இருக்கும் பொழுது நல்லவனாகவே இருக்கிறான். ஆனால் பல மாணவர்கள் ஒன்றுகூடினால் மோசமாக நடந்துகொள்கிறார்கள்.

மாணவர்கள் மாணவப்பருவத்தில் கல்வி ஒன்றே தனது குறிக்கோள் என்று கற்க வேண்டும். பெற்றோர்கள் தங்களின் கடமை உணர்ந்து, தியாக வாழ்வு மேற்கொள்ள வேண்டும். அதனால் நமது குடும்பம் உயரும், சமுதாயம் வளரும், நாடு தழைக்கும்.



# எனக்கு நேரமில்லை!

மு. மணிகண்டன், மேலாளர்

- பன்னிரண்டு மணி நேர பயணம் இப்போது நான்கு மணி நேரமாக சுருங்கிவிட்டது, ஆனாலும் மனிதன் சொல்கிறான்
  **- நேரமில்லை.**

- பன்னிரண்டு பேர் கொண்ட குடும்பம் இப்போது வெறும் இருவர், ஆனாலும் மனிதன் சொல்கிறான்
  **- நேரமில்லை.**

- முன்பு நான்கு வாரங்கள் எடுத்த செய்தி, இப்போது நான்கு வினாடிகளில், ஆனாலும் மனிதன் சொல்கிறான்
  **- நேரமில்லை.**

- தூரத்திலுள்ள ஒருவரின் முகத்தைப் பார்க்க முன்பு வருடங்கள் ஆயின, இப்போது வினாடிகளில் தெரிகிறது - ஆனாலும் மனிதன் சொல்கிறான்
  **- நேரமில்லை.**

- வீட்டில் சுற்றிச் செல்ல எடுத்த நேரமும் முயற்சியும், இப்போது லிஃப்ட்டில் வினாடிகளில் முடிகிறது, ஆனாலும் மனிதன் சொல்கிறான்
  **- நேரமில்லை.**

- வங்கி வரிசையில் மணிக்கணக்கில் நின்ற மனிதன், இப்போது மொபைலில் வினாடிகளில் பணப் பரிமாற்றம் செய்கிறான், ஆனாலும் மனிதன் சொல்கிறான்
  **- நேரமில்லை.**

- முன்பு வாரங்கள் எடுத்த மருத்துவ பரிசோதனைகள், இப்போது சில மணி நேரங்களில் நடக்கிறது, ஆனாலும் மனிதன் சொல்கிறான் **- நேரமில்லை.**

- ஆக்டிவாவில் செல்லும்போது, ஒரு கை கைப்பிடியில், இன்னொரு கை போனில்
  **- ஏனென்றால் நின்று பேச அவனுக்கு நேரமில்லை.**

- கார் ஓட்டும்போது, ஒரு கை ஸ்டீயரிங்கில், இன்னொரு கை வாட்ஸ்அப்பில்
  **- ஏனென்றால் அவனுக்கு நேரமில்லை.**

- ட்ராஃபிக் ஜாம் ஆனால், புதிய வழி உருவாக்க லேன் மாறுகிறான்
  **- ஏனென்றால் அவனுக்கு நேரமில்லை.**

- நண்பர்கள் மத்தியில், அவன் விரல்கள் போனில் பிஸியாக இருக்கும், ஏனென்றால் எங்கோ செல்ல வேண்டும் **- நேரமில்லை.**

- தனியாக இருக்கும்போது அவன் நிம்மதியாக இருக்கிறான், ஆனால் மற்றவர்கள் இருக்கும்போது அமைதியின்றி இருக்கிறான்
  **- ஏனென்றால் அவனுக்கு நேரமில்லை.**

- புத்தகம் படிக்க நேரமில்லை, பெற்றோரை அழைக்க நேரமில்லை, நண்பனைச் சந்திக்க நேரமில்லை,
  **- இயற்கையை ரசிக்க நேரமில்லை**

- ஆனால் -
  ஐபிஎல்-க்கு நேரம் இருக்கிறது,

நெட்ஃப்ளிக்ஸுக்கு நேரம் இருக்கிறது,
அர்த்தமற்ற ரீல்ஸுக்கு நேரம் இருக்கிறது,
அரசியல் விவாதத்திற்கு நேரம் இருக்கிறது
**- ஆனால் தனக்கு நேரமில்லை...**

- உலகம் எளிமையாகிவிட்டது, வேகமாகிவிட்டது, தொழில்நுட்பம் நெருங்கிவிட்டது, தூரங்கள் மறைந்து விட்டன, வசதிகள் பெருகிவிட்டன, வாய்ப்புகள் வளர்ந்துவிட்டன.. ஆனாலும் மனிதன் நேரமில்லை என்று சொல்லிக்கொண்டே தன்னிடமிருந்து விலகிச் சென்றான்.

- அமைதியாக உட்கார, தன்னோடு பேச, தன்னைப் புரிந்துகொள்ள, அல்லது சில நிமிடங்கள் மனமார சிரிக்க
**- நேரமில்லை என்கிறான்.**

- பின்னர் ஒரு நாள், நேரமே நழுவிப் போகிறது. அந்த இறுதி நொடியில் அவன் உணர்கிறான் - நேரம் இருந்தது... ஆனால் நேரமில்லை என்று சொல்லிக்கொண்டே வாழ்வதை மறந்துவிட்டேன்.*

- எனவே இன்றே முடிவு செய் - உனக்காக கொஞ்சம் நேரம் வை,

- உறவுகளுக்கு கொஞ்சம் நேரம் கொடு,

- உன் இதயத்திற்காக, உன் அமைதிக்காக, வாழ்வின் சாராம்சத்திற்காக கொஞ்சம் வாழ். ஏனென்றால் நேரமில்லை என்பது உண்மையல்ல - அது வெறும் பழக்கம்... அதை மாற்ற வேண்டும்.

---

# Latest Computer Science Tech Trends




Quantum computing is also beginning to make its mark in innovation management in 2025 by accelerating the process of solving complex problems. Quantum simulations can optimize product designs, enhance material science, and improve financial modelling.

In 2025, computer technology innovation is focused on advancements in AI, extended reality (XR), sustainable technologies, and cyber security. These innovations are reshaping industries and impacting how we live and work, with a strong emphasis on AI-powered solutions, immersive experiences, eco-friendly practices, and robust digital security.

We see AI and Gen AI having a major impact on companies' priorities and also on many adjacent technology domains, such as robotics, supply chains, or tomorrow's energy mix."

By 2030, computers will be faster, smarter, and more integrated into everyday life than ever before. Advances in artificial intelligence, machine learning, and edge computing will enable devices to make real-time decisions, adapt to user behaviour, and operate with minimal human intervention.

**What are the Latest Computer Science Tech Trends?**

Trend 1:
Artificial Intelligence.

Trend 2:
Quantum Computing.

Trend 3:
Edge Computing.

Trend 4: Robotics.

**- M.L.ENIYA M.C.A.,B.Ed.,**
Teacher

# சிதம்பரம் நடராசர் கோயில் வரலாறு..!

N. இராதிகா, ஆசிரியர்

**நடராசர்** கோயில் (Nataraja Temple, Chidambaram) அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சமயக் குரவர் நால்வராலும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவேரி வடகரை சிவத்தலங்கள் சோழ நாடு காவிரி வடகரைத் தலங்களில் ஒன்றாகும். இத்தலம் சிதம்பரம் தில்லை நடராஜர் கோயில் என்றும் சிதம்பரம் தில்லை கூத்தன் கோயில் என்றும் சிதம்பரக் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தலம் சைவ இலக்கியங்களில் கோயில் என்ற பெயராலேயே அழைக்கப்பெறுகிறது. அத்துடன் பூலோக கைலாசம் என்றும் கைலாயம் என்றும் அறியப்பெறுகிறது. இத்தலம் தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்திலுள்ள சிதம்பரம் என்னும் நகரில் அமைந்துள்ளது.

**தல வரலாறு**

'கோயில்' என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசப் பெருமானின் கோயிலைத்தான் குறிக்கும். ஊர்ப்பெயர் தில்லை; கோயிலின் பெயர் சிதம்பரம், இன்று ஊர்ப்பெயர் வழக்கில் மறைந்து, கோயிலின் பெயரே ஊர்ப் பெயராக வழங்கி வருகிறது.

தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையால் தில்லைவனம் என்று பெயர் பெற்றது. (இம்மரங்கள் தற்போது சிதம்பரத்தில் இல்லை; ஆனால் இதற்கு அண்மையிலுள்ள பிச்சாவரத்திற்குப் பக்கத்தில் உப்பங்கழியின் கரைகளில் காணப்படுகின்றன.)

இக்கோயிலுள் 'திருமூலட்டானம்' என்னும் தனிக்கோயில் ஒன்றுள்ளது. அர்த்தசாம வழிபாடு முடிந்தபின் எல்லாக் கோயில்களிலும் உள்ள சிவகலைகள் அனைத்தும் இந்த மூலத்தான லிங்கத்தில் ஒடுங்குவதாக ஐதீகம்.

சிற்றம்பலம் உள்ளே செல்வதற்கு ஐந்துபடிகள் - பஞ்சாக்கரப்படிகள் உள்ளன; இப்படிகளின் இரு புறமும் யானை உருவங்கள் உள்ளன. பதினான்கு சாஸ்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்தபோது, இப்படிகளிலுள்ள யானைகளில் ஒன்று தன் தும்பிக்கையால் அந்நூலையெடுத்து நடராசப்பெருமான் திருவடியில் வைத்தமையால் அந்நூல் 'திருக்களிற்றுப்படியார்' என்ற பெயர் பெற்றது.





இத்தலத்தில் நடனமாடும் சிவபெருமானை ஆடலரசர், கனகசபைநாதர் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டாலும் நந்தனார் நாயனார் தான் நடனமாடும் நிலையை வைத்தே நடராசர் என்ற பெயர் வைத்தார் பின்பு அப்பெயரே அனைவராலும் அழைக்கப்படும் பெயராக மாறியது.

இத்தலத்தின் மூலவர் : திருமூலநாதர், (தூய தமிழில் : பொன்னம்பலநாதர்)

உற்சவர் : நடராசர் (வடமொழியில் : கனகசபைநாதா)

அம்மன் / அம்மை : உமையாம்பிகை, (வடமொழியில் : சிவகாமசுந்தரி) இத்தலத்தின் தலவிருட்சமாக தில்லை மரமும், தீர்த்தமாக சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தங்களும் உள்ளன. இத்தலமானது பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான ஆகாயத் தலமாகும். இத்தலம் திருநீலகண்ட நாயனார் அவதாரத் தலம் எனவும் கூறப்படுகின்றது.[1]

சிதம்பரம் திருமூலராலும், பதஞ்சலி மற்றும் வியாக்கியபாதர் எனும் முனிவர்களாலும் வணங்கப்பட்டுள்ளது.[2] 275 பாடல் பெற்ற சிவத்தலங்களில் முதல் முக்கிய இடம் வகிக்கும் தலம் இதுவே ஆகும். திருவாசகத் திருத்தலங்களில் ஒன்றாகும்.[3] அவ்வாறே திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருத்தலங்களில் ஒன்றாகும்.[4]

**கோயிலின் வரலாறு**

இக்கோயில் சோழர், பல்லவர், விஜய நகர அரசுகளாலே புனரமைக்கப்பட்டு வந்துள்ளதோடு, இவ்வரசுகளிடமிருந்து இக்கோயிலுக்கு மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**வடிவமைப்பு**

மனிதரின் உடம்பும் கோயில் என்பதனை விளக்கும் வகையில் சிதம்பரம் நடராசர் கோயில் அமைந்துள்ளது. மனித உடலானது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து சுற்றுக்களைக் (கோசங்கள் என்னும் Layers) கொண்டது. அதற்கு ஈடாக சிதம்பரம் நடராசர் கோவிலில் ஐந்து திருச்சுற்றுகள் என்னும் பிரகாரங்கள் உள்ளன. மனிதருக்கு இதயம் இடப்புறம் அமைந்திருக்கிறது. அதேபோல அக்கோயிலில் மூலவர் இருக்கும் கருவறை கோயிலின் நடுப்புள்ளியில் இல்லை. இடதுபுறமாகச் சற்று நகர்ந்து இருக்கிறது. ஒரு மனிதர் ஒரு நாளைக்கு 21,600 முறை நுரையிரல் உதவியால் மூச்சுவிடுகிறார். கோயிலின் இதயம்போல அமைந்திருக்கும் கருவறையின் மீதுள்ள கூரை 21600 ஓடுகளால் வேயப்பட்டு இருக்கிறது. மனிதருக்குள் 72000 நாடிகள் ஓடுகின்றன. அதேபோல அக்கூரையில் 72000 ஆணிகள் அறையப்பட்டு உள்ளன. இதயத்தின் துடிப்பே நடராசரின் நடனமாக உருவகிக்கப்பட்டு இருக்கிறது.[6]

**கோபுரங்கள்**

இக்கோவிலில் நான்கு ராஜகோபுரங்கள்

உள்ளன. இவை ஏழு நிலைகளைக் கொண்டவை யாகும். கோபுரத்தின் அடிப்பகுதி 90 அடி நீளமும், 60 அடி அகலமும் கொண்டதாகவும், 135 அடி உயரம் உடையதாகவும் அமைந்துள்ளது. இக்கோபுரத்தின் வாசல் 40 அடி உயரம் உடையவையாகும்.

இக்கோவிலின் கிழக்கு கோபுரத்தில் 108 சிவதாண்டவங்களுக்கான சிற்பங்கள் காணப் படுகின்றன.

**கோபுரங்கள் மண்டபங்கள்**

சிதம்பரம் நடராஜர் கோவிலின் இராஜ கோபுரம் விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவ ராயரால் கட்டப்பட்டது. கலைநயமிக்க சிற்பங்கள் நிறைந்த ஆயிரங்கால் மண்டபம் விஜயநகர பேரரசின் தஞ்சை நாயக்க மன்னர்கள் அமைத்தார்கள்.

**சிதம்பர ரகசியம்**

இச்சபையில் சபாநாயகரின் வலது பக்கத்தில் உள்ளது ஒரு சிறிய வாயில், அங்குள்ள திரை அகற்றப்பட்டு தீபாராதனை காட்டபடும். அங்கு திருவுருவம் இல்லாது, தங்கத்தால் ஆன வில்வ தளமாலை ஒன்று தொங்கவிடபட்டிருக்கும். இதன் ரகசியம் இங்கு இறைவன் ஆகாய உருவில் இருக்கின்றார் என்பதுதான். ஆகாயத்துக்கு ஆரம் பமும், முடிவும் கிடையாது, அதை உணரத்தான் முடியும் என்பதை உணர்த்துவதேயாகும்.

**சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா**

நடனக்கலைகளின் தந்தையான சிவபெரு மானின் நடனமாடும் தோற்றம் நடனராசன் எனப்படுகிறது. இது மருவி நடராசன் எனவும் அழைக்கப்படுகிறது. சிவபெருமானில் பலவகை யான நடனங்களில் இத்தலத்தில் ஆனந்த தாண்டவம் நிகழ்கின்றது. சிதம்பரம் கோவிலில், நாட்டியாஞ்சலி என்ற நாட்டிய விழா ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. இங்கு உலகில் பல்வேறு இடங்களில் நாட்டியம் பயிலும் கலைஞர்கள், தங்களுடைய நாட்டியத்தை அர்ப்பணமாக வழங்குகின்றனர். கலைஞர்கள் இங்கு வந்து நாட்டியார்ப்பணம் செய்வதை ஒரு பெருமையாக கருதுகின்றனர்.

# அமைதி..!

மன அமைதி பெற விரும்பினால் பிறர் குறைகளைக் காணாதே.. அதற்குப் பதிலாக உன் குறைகளைக் காண.

சரியான நேரத்தில் அமைதிகாத்து விடுவது, எதிர்காலத்தில் மன அமைதி யைத் தேடி நிற்காமல் நம்மைக் காக்கும்.

இயற்கையோடு இணைந்து போகும்போது மனம் நிறைந்த அமைதி கிடைக்கும்.

எல்லா சூழ்நிலைக்கும் பொருந்தக் கூடிய ஒன்று அமைதி.

எந்தச் சூழ்நிலைக்கும் பொருந்தாத ஒன்று கோபம்.

அமைதியைவிட உயர்வான சந்தோசம் இந்த பூமியில் வேறு ஒன்றும் இல்லை.

- **பெ.குமாரவேலு ஆசிரியர்**



# Amazing Facts

1. At birth, a baby panda is smaller than a mouse.
2. Iceland does not have a railway system.
3. Violin bows are usually made from horse hair.
4. Ancient Egyptians used honey as a wound treatment.
5. Memory and Venus are the only two planets in our solar system that do not have any moons.
6. It takes Uranus 84 years to orbit the sun once.
7. Every second, the human eye moes about so time.
8. Animals yawn based on how large their brain is. The bigger the brain, the longer they will yawn.
9. Kangaroos keep growing untill they die.
10. Group of unicorns is called a Blessing

**- S. Bhuvaneshwari, Teacher**



# Civil Services Day April 21

**About Civil Services**

Civil servants are perma nent officials in the executive wing of governance.

**Genesis :** The concept of a merit-based modern Civil Service in India was introdu ced in 1854 following Lord Macaulay's Report.

**Post-independence:** Civil Services, after Indepen dence, have been categorised into three types:

All India Services (common to both Centre & States): recruited and trained by the Central Government, but, for work, they are assigned to different States.

Central Services (for purely Central subjects) and State Services (for adminis tration of subjects under State jurisdiction).

**Constitutional provisions related to Civil Services**

**Article 310:** person in defence or civil service of the union holds office during the pleasure of the president, and very member of the civil service in the states holds office during the pleasure of the covernor

**Article 311:** provision related to dismissal, removal or reduction in rank of a member of a civil service.

**Article 312:** Provides for establishment of All India Services.

**Role of Civil Servants in Governance**

Continuity of governance: Being part of permanent executive Civil servants ensure continuity in gover nance even when elected governments change.

Interface between govern mentandpeople:Civilservants act as the main channel for communicating people's needs to the government and implementing government policies on the ground.

**Policy formulation:** They provide necessary inputs, identify policy areas, analyse alternatives, solutions to societal issues etc. and advice to the ministers.

**Cementing Indian democracy:**

Free and fair elections: Election Commission has played a pivotal role in ensuring elections in India are free and fair. Reforms introduced by former CEC T.N.Seshan is considered to be critical in reducing the influence of money and muscle in election.

**Participative democracy:** Example, in 1976, A.M. Gokhale introduced the Village Development Board (VDB) in Nagaland for decentralised grassroots planning and development.

Inclusive democracy: Many civil servants have played critical role in giving voice to voiceless. For example, in 2020, the Balangir district administration launched 'Sweekruti' to integrate the transgender community into mainstream activities and social security schemes.

**Growth and development:**

Enforcing law and order: Peace is crucial for socio-economic development of the country. Civil servants work towards addressing social tensions, conflicts and thus create social unity and harmony.

For instance, Sanjukta Parashar (IPS officer), also known as Iron Lady of Assam played a critical role on in tackling northeast insurgency.

**Overcoming resource constraints: For example,**

IAS officer Armstrong Pame, known as the Miracle Man of Manipur, crowdfunded through social media to construct a 100 km road in 2012 without state financial

aid. Now this road is also known as "people's road".

Operation Sulaimani, pioneered by Prasanth Nair (former District Collector of Kozhikode in Kerala), uses nameless donations from the public to provide food with dignity. This facilitates in ensuring Right to Food

**Career Diplomats:** Civil servants represent their country in international forums and play an important role in negotiating agreements, promoting national interest, protecting friendly relations with other countries, etc.

**Quasi- Judicial role:** Civil servants serves on tribunals, like Telecom Disputes Settlement and Appellate Tribunal, Cyber Appellate Tribunal etc.,

**Delegated Legislation:** The civil servants frame departmental legislation. The legislature gives a broad outline of legislation and delegates to the civil servants the power to make details of that legislation.

**UL. Sumathi, Bt. Asst.**

## நமது முன்னோர்கள் பயன்படுத்திய அரிசி வகைகள் மற்றும் பயன்கள்

1. கருப்பு கவுனி அரிசி
   - புற்றுநோய் வராது, இன்சுலின் சுரக்கும்.
2. மாப்பிளை சம்பா அரிசி
   - நரம்பு, உடல் வலுவாகும்.
3. மூங்கில் அரிசி
   - மூட்டு, முழங்கால் வலி சரியாகும்.
4. கார் அரிசி
   - தோல் நோய் சரியாகும்.
5. நீலம் சம்பா அரிசி
   - இரத்த சோகை நீங்கும்.
6. கருடன் சம்பா அரிசி
   - இரத்தம் சுத்தமாகும்.
7. அறுபதாம் குருவை அரிசி
   - எலும்பு வலுவாகும்.
8. கிச்சிலி சம்பா அரிசி
   - இரும்பு சத்து அதிகமாகும்.
9. சீரகசம்பா அரிசி
   - எதிர்ப்பு சக்தி கூடும்.

**N. Latha, B.Sc.,B.Ed., Teacher**

Sound travels about 5 times faster in water than in air. Since the speed of sound in sea water in very large (being about 1530 $ms^{-1}$ which is more than 5500 $km/h^{-1}$), two whales in the sea which are even hundreds of kilometres away can talk to each other very easily through the sea water.


2. The distance of Andromede, our nearest galaxy is approximately 2.5 millon light years. if we move at the speed of the earth (30 km/s), it would take us 25 billion years to reach it!

3. The sun travelling at a speed of 250 km per second (9 lakh km/h) takes about 225 million years to complete one revoluation around the milky way. This period is called a cosmic year.

**R. SHIVANI, X-C**

The first motocross rider to successfully land a back flip on his bike was caleb wyath and he achieved this landmark on 23 April 2002

**P. Kalika Sri, IX-C**



# Facts of Tajmahal

**- Tajmahal - The main attraction and symbol of India**

Everyone recognizes that the Tajmahal is one of the seven wonders of the world. The mausoleum is a glorious structure, built of white marble, symbolizig purity. Just like no other architecture does. The majestic and luxurious place of Tajmahal. located on the outskirts of Agra (27 Bc and 78 AD). 200 km from Delhi. the capital of India, let us look at some interesting facts about the Tajmahal.

**- S. Kanishka, IX-C**



# பெருந்தலைவர் காமராஜர்

**பெருந்தலைவர்** காமராஜர் தனக்கென்று வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து, நாட்டு மக்கள் உள்ளத்தில் நிரந்தர இடத்தைப் பெற்றவர். விருதுபட்டி என்னும் விருதுநகரில் குமாரசாமி நாடார் - சிவகாமி அம்மாள் தம்பதிக்கு 1903, ஜூலை 15 அன்று மகவாக பிறந்தவர்.

6 வயதுச் சிறுவனாக இருந்தபோதே தந்தையை இழந்தார். 6ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போதே பள்ளிக்குச் செல்வதை நிறுத்த வேண்டிய நிலைமைக்கு ஆளானவர். தன் முழு நேரத்தையும் நாட்டுப் பணிக்கு அர்ப்பணிப்பதற்காக திருமணம் செய்து கொள்ளவும் மறுத்தவர். எளிய தொண்டனாக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி, உண்மையான உழைப்பால், அடக்கமான எளிய வாழ்க்கையால் உயர்ந்த பதவிகளைப் பெற்று, வரலாற்றுப் புகழை அடைந்தார்.

பல்கலைக்கழகப் படிப்போ, பட்டமோ பெறாதிருந்தும் தனிப்பட்ட முறையில் ஏராளமான நூல்களைப் படித்து உலக அறிவை வளர்த்துக் கொண்டார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1954 முதல் 1963 வரை முதலமைச்சராக இருந்தார். பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அனைவருக்கும் 11ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்தார். பதவியைச் சேவை செய்வதற்கான வாய்ப்பாகவே கருதினார். சேவையில் முழுநேரம் ஈடுபடுவதற்காகப் பதவியைத் துறக்கவும் அவர் தயங்கிடுவதில்லை. ஏழை எளிய மக்களை வாழ வைக்க வேண்டும் என்ற இலட்சியப் பிடிப்போடு பாடுபட்டு, இந்தியாவில் தமிழ்நாட்டிற்குத் தனிப் பெருமை தேடித் தந்தார். ஜவஹர்லால் நேரு மறைந்தபோது இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் தனிப் பெருந்தலைவராக காமராஜர் செயல்பட்டார்.

காமராஜர் கர்மவீரர் என்றும், கிங் மேக்கர் என்றும், ஏழைப் பங்காளன் என்றும் போற்றப்பட்டவர். இளம் வயதிலேயே காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு பலமுறை சிறை சென்றார். நாட்டு விடுதலைக்காக 9 ஆண்டுகள் சிறையிலிருந்தார். 1940இல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்றார். 1964இல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார். அதனால்தான் அவர் 'கிங் மேக்கர்' என அழைக்கப்படுகிறார். மற்றும் கல்வித் தந்தை என பெயர் பெற்றார்.

**- M. Agathiya-VII**



# படிப்பதில் சலிப்பா

Rtn. N. முரளிதரன், முதல்வர்

**படிப்பு** என்பது சில சமயங்களில் சலிப்பாகவோ, சவாலாகவோ தோன்றலாம். தேர்வு அழுத்தம், பாடங்களின் கடினம், ஆர்வமின்மை எனப் பல காரணங்களால் மாணவர்கள் படிப்பதில் தடுமாறலாம். ஆனால், உலகை மாற்றியமைத்த பல மகத்தான ஆளுமைகள், அறிவைத் தேடுவதையும், கற்றுக்கொள்வதையும் ஒருபோதும் சலிப்பான ஒன்றாகக் கருதியதில்லை. அவர்களில் ஒருவர் தான் எலான் மஸ்க்.

ஸ்பேஸ்எக்ஸ் (SpaceX), டெஸ்லா (Tesla), எக்ஸ் (X-Twitter) போன்ற பல புரட்சிகர நிறுவனங்களை நிறுவிய எலான் மஸ்க், தனது வெற்றிகளுக்குக் காரணம் கற்றலின் மீதான தீராத ஆர்வம் என்று பலமுறை கூறியுள்ளார். அவரது வார்த்தைகளில், படிப்பு என்பது ஒரு சுமையல்ல, அது ஒரு சாத்தியக்கூறுகளின் திறவுகோல். படிப்பதில் சலிப்புணர்வை நீக்கி, அதை ஆர்வமூட்டும் ஒன்றாக மாற்ற எலான் மஸ்க் கூறிய சில அற்புதமான மேற்கோள்களை இந்தப் பதிவில் பார்க்கலாம்.

*1.* "படித்தல் என்பது மனதை ஒரு புதிய இடத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரு வழியாகும்."

*2.* "உங்கள் இலக்கை அடைய நீங்கள் உண்மையிலேயே விரும்பினால், எந்த தடையாக இருந்தாலும் அதை அடைய வழி கிடைக்கும்."

*3.* "நான் புத்தகங்களில் வளர்க்கப்பட்டேன். புத்தகங்கள், பள்ளி, என் பெற்றோர்கள் இவற்றை விட எனக்கு முக்கியம்."

*4.* "தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருங்கள்."

*5.* "ஒவ்வொரு பிரச்சனையையும், அதை தீர்ப்பதற்கான வாய்ப்பாகப் பாருங்கள்."

*6.* "உங்கள் மனம் ஒரு தசையைப் போன்றது. நீங்கள் அதைப் பயன்படுத்தாவிட்டால், அது பலவீனமாகிவிடும்."

*7.* "தோல்வி என்பது ஒரு விருப்பம். தோல்வியடையாதவர்கள் போதுமான புதுமைகளைச் செய்யவில்லை."

*8.* "எப்போதும் சிறந்ததைப் பற்றி சிந்தியுங்கள். முடிந்ததைச் செய்யுங்கள்."

எலான் மஸ்கின் இந்த மேற்கோள்கள், படிப்பு என்பது ஒரு சுமையல்ல, அது அறிவு மற்றும் வளர்ச்சிக்கான ஒரு வாய்ப்பு என்பதைப் புரியவைக்கும். உத்வேகத்துடன் கற்றுக்கொண்டு, உங்கள் இலக்குகளை அடைய இந்த வார்த்தைகள் உங்களுக்கு உதவும்.

# HOLME'S SIGNAL



A Holmes signal is a maritime signaling method using chemical reactions to create a visible light and smoke signal. It typically involves a container holding calcium carbide and calcium phosphide, which, when submerged in water, react to produce flammable gases, primarily phosphine and acetylene. These gases ignite, creating a bright flame and smoke, serving as a distress or location signal for ships at sea.

**How it works:**

**1. Chemicals:** Calcium carbide ($CaC_2$) and calcium phosphide ($Ca_3P_2$) are placed ina perforated container.

**2. Water Interaction:** When the container is thrown into the sea, water enters through the holes and reacts with the chemicals.

**3. Gas Production:** The reaction with calcium carbide produces acetylene ($C_2H_2$), and the reaction with calcium phosphide produces phosphine ($PH_3$).

**4. Ignition:** Phosphine is spontaneously flammable and also ignites the acetylene, creating a bright flame and smoke.

**5. Signaling:** The resulting flames and smoke serve as a visual signal to other ships, indicating the location or distress of the signaling vessel.

**APPLICATIONS OF PHOSPHINE :**

Phosphine ($PH_3$) is a versatile chemical compound with several key uses. It's primarily employed as a fumigant in agriculture to control pests in stored grains, and also as a dopant in the semiconductor industry. Additionally, phosphine plays a role in the synthesis of other chemicals, including organophosphorus compounds and flame retardants. It's also used in the production of Holme's signals, which are used in marine navigation, and in the preparation of smoke screens.

**Here's a more detailed breakdown:**

1. Fumigation: Phosphine is a highly effective fumigant used to control insects and rodents in stored grains, such as wheat, rice, and corn. It's also used to protect stored agricultural products and animal feed.

2. Semiconductor Industry: In the semiconductor industry, phosphine is used to introduce phosphorus into silicon crystals, creating n-type semiconductors. These semiconductors are essential components in electronic devices.

3. Synthesis of Chemicals: Phosphine serves as a precursor in the production of various organophosphorus compounds, which have diverse applications in agri culture (pesticides), medicine, and other industries. It's also used in the synthesis of flame retardants, making materials more resistant to ignition.

4. Marine Navigation: Phosphine is a key component in Holme's signals, which are used by ships to determine their position relative to rocks and other hazards in the sea. The spontaneous combustion of phosphine in air is utilized for this purpose.

5. Smoke Screens: Phos phine can be used to create smoke screens, likely for military or other tactical pur poses, due to its ability to produce large amounts of smoke when ignited.

6. Other Uses: Phosphine is also used as a polymerization initiator and in the production of some batteries.

**S. ATCHAYA, M.Sc.,DCA.,**
**Office Staff**

The deepest place ever reached by human technology vary from time to time. till 2011 Chargo super hole (12,262m) in Murmask, Russia was the deepest place. But in 2012, Z-44 change well (12,376m) brake th record, and is supposed to be 15 time the heighl of Burj Khalifa in Dubai, the exploration of earth's interior continues.

**B. Yazhini, IX-C**

The world's highest waterfall is Angel Fall of Venezuela in South America The other water falls are Niagara falls located on the border between canada and U.S.A in north America and Victoria fall on the border of Zombie and Zimbabwe in Africa

**A. Sadhana, VII-C**

## Science facts and more to known

1. Mass of 1 ml. of water = 1g.
2. Mass of 1 l. of Water = 1kg.
3. Mass of other liquids vary with their do...

In 1930 Rutherford predicted the presence of another particle in the nucleus as natural. James Chadwick, the inventor of neutron was a student of Rutherford.

**V. Lakshmi, IX-**

## DID YOU KNOW ?

In 1950, 30% of the world's population was urban, and by 2050, 68% of the world's population in projected to be urban (world urbanisation prospects, 2018, key facts.

**S. Jasika, IX-C**

Giving oranges during their new year season is a festive ritual of the chinese. They are usually given in pairs as a symbol of friendship

**- M.P. Shahana, IX-C**

40% of todays global population works in agriculture, making in the single forest employment in the world.

**M. Gayathiri, IX-C**

The country Egypt is called the Gift of the Nile as it is the lifeline of the Egypt, without Nile the Egypt would have been a desert. Australia was discovered by captain James Cook, an english seaman in 1770

**R. Sujipriya, B.E.,B.Ed.,**

The word 'Paper' comes from 'Papyrus' The Egyptians wrote on the leaves of a plant papyrus a kind of reed, which grew on the banks of Nile.

**Safficaa IX-C**


தமிழ்நாடு காவல்துறை
அறிவிப்பு

பெண்கள் தனியாக ஆட்டோவிலோ அல்லது கார்லயோ பயணம் செய்வதற்கு முன் அந்த வாகனத்தின் பதிவு எண்ணை 9969777888 என்ற எண்ணுக்கு அனுப்புங்கள். காவல்துறை அந்த வாகனத்தை GPRS மூலம் கண்காணிக்கும். இந்த தகவலை தங்கள் அனைத்து குழுமங்களிலும் பகிரவும்..

பகிருங்கள்

## விடுகதை...

Use பண்றதுக்கு முன்னாடியே நம்ம உடைக்கிற பொருள் எது? - **முட்டை**

அமைதியான பையன், அடிக்காமலேயே அழுவான் அவன் யார்? - **ஐஸ் கட்டி**

ஊருக்கே ஒரே Light ஆனா அதுக்கு ஒரு நாள்தான் Rest! அது என்ன? - **நிலா**

இளமையில் நீலமாக இருக்கும், வயதானால் சுருங்கிவிடும் அது என்ன? - **மெழுகுவர்த்தி**

அந்தரத்தில் தொங்குது சொம்பும் தண்ணியும்! அது என்ன? - **இளநீர்**

- **ம. யாழினி** IV-A

## தெரிந்துகொள்வோம் நில அளவுகள்...

1 கிரவுண்ட் - 2400 சதுர அடி

1 சென்ட் - 435 சதுர அடி

1 ஹெக்டர் - 2 ஏக்கர் 47 சென்ட்

1 காணி - 1.32 ஏக்கர்

1 கி.மீட்டர் - 1000 மீட்டர்

1 மீட்டர் - 3281 அடி

1 குழி - 44 சென்ட்

1 மா - 100 குழி

1 அடி - 12 இஞ்ச்

1 மைல் - 1.61 கி.மீ.

1 ஏக்கர் - 100 சென்ட்

- **V. Kavitha,** M.Sc.,B.Ed.,

## பழமொழிகள்...

1. அக்கரைக்கு இக்கரை பச்சை.
2. அகல இருந்தால் பகையும் உறவாம்.
3. அடிக்கிற கைதான் அணைக்கும்.
4. அடிப்பவர் அடித்தால் அம்மியும் நகரும்.
5. அடிபட்ட நாய்க்கு கறியைக் காட்டினாலே போதும்.
6. அகம்பாவம் அழிவைத் தரும்.
7. நேர்மையே உயரிய கொள்கை.
8. பேசும் முன் யோசி.
9. வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும்.
10. அறிவே ஆற்றல்.
11. தன் கையே தனக்கு உதவி.
12. ஒற்றுமையே பலம்.

**G. Vijisri, V-A**

## அன்பின் இரு கண்கள்

அம்மா என் உயிரின் முதற்கவி.
அப்பா என் வாழ்வின் முதற்சுவை.
அம்மா கொடுக்கும் அன்பு கடல்,
அப்பா தரும் தைரியம் கன்னல்!

ஒருவர் சிரிப்பில் சூரியன் தோன்றும்,
மற்றோர் கண்ணீரில் மேகம் தோன்றும்
அவர்கள் இருந்தால் தான் வாழ்க்கை
இல்லை என்றால் வாழ்க்கை வெறுமை.

- **செ.சபரி,** V-A

## Amazing Facts about the "Science"

- 50% of the world's oxygen is produced by the sea
- One letter doesn't exists in the periodic table
- Water can boil and freeze at a same time
- Some chemicals cannot live with oxygen
- It takes eight minutes for the light to travel from the sun to earth.
- The sun provides energy for us in the form of heat and light
- In our body 242 billions of new cells are produced every day.
- The father of science is known as Galileo Galilei

**- A. Aishwarya,**

# தமிழ் மொழி

தடுக்கி விழுந்தால் மட்டும் அ... ஆ...
சிரிக்கும்போது மட்டும் இ... ஈ...
சூடு பட்டால் மட்டும் உ... ஊ...
அதட்டும்போது மட்டும் எ... ஏ...
ஐயத்தின்போது மட்டும் ஐ...
ஆச்சர்யத்தின்போது மட்டும் ஒ... ஓ...
விக்களின்போது மட்டும் ஃ...
என்று தமிழ்பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன்மொழி
தமிழ் மொழியென்று!!

**S. Nivendhan, V-A**

# Fact

C.F. Richter devised a scale to measure the magnitude of earthquakes. This scale relates to the energy released at the epicentre and provides an estimation of the severity of an earthquake. It is an open ended scale. The highest magnitude ever recorded is 9.5 on Richter Scale (Bio-Bio, Chile in 1960)

**- R. Eniya, IX-C**

# கவிதை

பறக்கும் பட்டமல்ல
நம் ஆசிரியர்கள்
நம்மை உயர உயர
பறக்க வைக்கும்
நூலாகிறார்கள்
நம் ஆசிரியர்கள்!
நன்றி!

**- தெ. தர்ஷினி, V-A**

# Mathematics

Without mathematics there's nothing you can do everything around you is mathematics. Everything around you is numbers.

Mathematics is a more powerful instrument of knowledge than any other that has been bequeathed to us by human agency.

**- S. Priyanga**

# Motivational Quotes for Students

- Dreams fuel success
- Study smart, not just hard
- Learn, Grow, Succeed
- Beliee in your abilities
- You've got potential
- Stay forward, stay sharp
- Your effort, your reward
- Success, one step at a time
- Stay curious, stay ahead
- Make your own luck

**- P. Srilakshmi, B.A.,B.Ed.,**

# SCIENCE

Common compounds and their chemical formula

| Name | Formula |
|---|---|
| Water | $H_2O$ |
| Glucose | $C_6H_{12}O_6$ |
| Salt | NaCl |
| Ethanol | $C_2H_5OH$ |
| Ammonia | $NH_3$ |
| Sulphuric Acid | $H_2SO_4$ |
| Methane | $CH_4$ |
| Sucrose | $C_{12}H_{22}O_{11}$ |

**M. Asfana, VII-C**

Notochord is a rod like structure formed on the mid/dorsal side of the body during embryonic development except primitive forms in which the notochord presists throughout life in all other animals it is replaced by a backbone

**A.M. Monisha, IX-C**

# Success Quotes

Success is never "Permanent"
Failure is never "End"

**P. Kalika Sri, IX-C**

# G.K. QUESTIONS

1. Which plannet is closest to sun ? **- Mercury**
2. What is the capital city of Japan? **- Tokyo**
3. What is the longest river in the world? **- Nile**
4. What is the hardest Natural substance on earth? **- Diamond**
5. What is the smallest continent by land area? **- Australia**

**S. Zigara Maryam V-A**

# பட்டாம்பூச்சி

பட்டாம்பூச்சி... பட்டாம்பூச்சி...
பறந்துப்போச்சி!
வண்ண வண்ண இறக்கைகளால்...
பறந்து தூரம் சென்றிடுவாய்!
வண்ண மலர்கள் மேல் அமர்ந்து...
நீயும் தேனை ருசித்திடுவாய்!
இப்படி எல்லாம் பறந்து வந்து...
குழந்தைகள் மனதை மயக்கிடுவாய்!
பட்டாம்பூச்சி... பட்டாம்பூச்சி...
பறந்துப்போச்சி!

**- கா.தன்ஸ்ரீ V-A**

# ஆழிக்கு இணை

முத்தமிழ் துய்ப்பதால் முச்சகம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்(கு)
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு
- சந்தக்கவிமணி தமிழழகனார்

**ச. நித்திஷ் கௌதமன்,** VIII-A தமிழ்...

# நான்மணிக்கடிகை

ஆசிரியர் - விளம்பி நாகனார்
பாடல்கள் - 104+2 (கடவுள் வாழ்த்து)
யாப்பு - வெண்பா
நோக்கம் - வாழ்க்கை நெறிகளை அறிவுறுத்துவது
காலம் - நான்காம் நூற்றாண்டு

- பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய நான்மணிக்கடிகை அறநூலாகும்.
- ஒவ்வொரு பாடல்களில் கூறப்பெறும் நான்கு கருத்துகளினால் நான்மணிக்கடிகை என்று பெயர் பெற்றது.
- நான்மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பி நாகனார், விளம்பி என்து ஊர்ப்பெயர் எனவும், நாகனார் என்பது இயற்பெயர் எனவும் கொள்வார்.
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் திருமாலைப் பாடுவதாக அமைந்ததால் விளம்பி நாகனார் வைணவ மதத்தை சார்ந்தவர் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.
- கடிகை என்ற சொல்லுக்கு அணிகலன் என பொருள்

**B. Ramprabu, Teacher.**

# Do you know?

Electrostatic forces between, two point changes obey Newton's thirdlaw. The force on one charge is the action and on the other is reaction and vice versa.

# வெற்றி

முடிந்த வரை போராடு!
உன்னால் முடிந்த வரை
அல்ல...
நீ நினைத்தது முடியும்
வரை போராடு..!!

**- ச.மேதா, IX-E**

# பாரதியார் பாடல்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!
என்றென்றும் வாழிய வே!

**S. Sridhar, VIII-A**


# Computer

Bits and bytes, in perfect tune,
Orchestrating dusk till noon.
Under keys. a hidden dance,
The silent magic of freelance

In circuits, songs of zero - one,
A melody beneath the sun,
Subroutines in nested grace,
unevil a web we interlace

Call it code, or digital art
Woven threads that never part
From machine to human pleo,
A symphony in binary

**K. Balambica, Teacher.**



பாகம்-7

# Spoken English "Speak Well"

**A. PAZHANISAMY,**
Teacher

அனைவருக்கும் வணக்கம்

ஆங்கிலம் எப்படி எளிதாக பேசுவது என்ற தொடர் பாகத்தில் நாம் ஏற்கெனவே Grammar பகுதியில் Parts of Speech, Kinds of Sentences and tenses பார்த்தோம்.

அந்த வகையில் இப்பொழுது வினா அமைத்தல் எப்படி, கேள்வி கேட்பது எப்படி என்று பாரக்கும்போது (There are two types of Questions) இரண்டு விதமான வினா வகைகள் அமைத்தல் பகுதியை காணலாம்.

1. Yes / No - Type Questions
2. 'W/H' - Type Questions

இதை விரிவாக பார்ப்பதற்கு முன்பாக 'Wh'-Type Questions words and Yes / No type question words ஆகியனவற்றை முதலில் பார்ப்போம்.

## 1. Yes / No Type Question words

| | |
|---|---|
| am | - இருக்கிறேன். |
| is | - இருக்கிறது, இருக்கிறார். |
| Was | - இருந்தது, இருந்தார். |
| Are | - இருக்கின்றன, இருக்கின்றனர் |
| Were | - இருந்தன, இருந்தனர் |
| Do | - செய் |
| Did | - செய்தது |
| Does | - செய்தல் |
| Done | - செய்து முடிந்துவிட்டது. |
| Have | - வைத்துள்ளேன் |
| Has | - வைத்துள்ளனர், வைத்துள்ளது. |
| Had | - வைத்திருந்தது. |
| Will | - எதிர்காலத்தை குறிக்கும் சொல் |
| Would | - விருப்பத்தைக் குறிக்கும் சொல் |
| Shall | - எதிர்காலத்தை குறிக்கும் சொல் |
| Should | - உறுதியாக, கண்டிப்பாக |
| Can | - முடியும் |
| Could | - முடிந்தது |
| May | - அனுமதி கேட்கும் சொல் |
| Might | - பணிவாக அனுமதி கேட்கும் சொல் |
| Must | - கண்டிப்பாக |
| Ought to | - மிகவும் கண்டிப்பாக |
| Dare | - துணிச்சலாக, தைரியமாக |
| Need | - தேவை |

## 2. 'Wh' - type questions words

| | |
|---|---|
| Who? | - யார்? |
| Whom ? | - யாரை? |
| Whose ? | - யாருடைய? |
| What | - என்ன? |
| Which ? | - எது?, எந்த? |
| When? | - எப்பொழுது? |
| Where ? | - எங்கே? |
| Why ? | - ஏன்? |
| How ? | - எப்படி? |

| | |
|---|---|
| For what ? | - எதற்காக? |
| By what ? | - எதனால்? |
| With what ? | - எதனோடு? |
| On what | - எதன்மீது? |
| From what | - எதிலிருந்து |
| Through what ? | - எதன்மூலம்? |
| What idea? | - என்ன யோசனை? |
| What work? | - என்ன வேலை? |
| What motto ? | - என்ன குறிக்கோள்? |
| What friendship ? | - என்ன நட்பு? |
| What remedy ? | - என்ன தீர்வு? |
| Which state? | - எந்த மாநிலம்? |
| By which way? | - எந்த பாதையில்? |
| In which year | - எந்த வருடத்தில்? |
| In which school | - எந்தப் பள்ளியில்? |
| In which college? | - எந்தக் கல்லூரியில்? |
| In which book? | - எந்த புத்தகத்தில்? |
| In which newspaper? | - எந்த செய்தித்தாளில்? |
| On which day | - எந்த நாளில்? |
| On which date ? | - எந்த தேதியில் |
| Whose book? | - யாருடைய புத்தகம்? |
| Whose face? | - யாருடைய முகம்? |
| Whose poem ? | - யாருடை கவிதை |
| By whom? | - யாரால்? |
| To whom ? | - யாருக்கு? |
| From whom ? | - யாரிடமிருந்து |
| For whom ? | - யாருக்காக ? |
| On whom ? | - யார் மீது ? |
| At whom ? | - யாரைப் பார்த்து? |
| Under whom ? | - யாருக்குக் கீழ்? |
| Against whom? | - யாருக்கு எதிராக? |
| With whom? | - யாருடன்? |
| Through whom ? | - யார் மூலம்? |
| Whom else ? | - வேறு யாரை? |
| From where ? | - எங்கிருந்து? |
| From when? | - எப்பொழுதிலிருந்து |
| By which? | - எதனால்? |
| For which ? | - எதற்காக? |

| | |
|---|---|
| In which ? | - எதில்? |
| How Many ? | - எத்தனை? |
| How much ? | - எவ்வளவு ? |
| How far ? | - எவ்வளவு தூரம்? |
| How bitter? | - எவ்வளவு கசப்பான? |
| How meek ? | - எவ்வளவு சாந்தமான? |
| How many times ? | - எத்தனை முறைகள்? |
| How many days ? | - எத்தனை நாட்கள்? |
| What else ? | - வேறு என்ன? |
| Who else ? | - வேறு யார்? |
| Whom else ? | - வேறு யாரை? |
| How else ? | - வேறு எப்படி? |
| Why (is) not? | - ஏன் இல்லை? |
| Which (is) not? | - எது இல்லை? |
| What then ? | - அப்புறம் என்ன? |
| Where then ? | - அப்புறம் எங்கே? |
| How then ? | - அப்புறம் எப்படி? |
| What next | - அடுத்து என்ன? |
| Where next ? | - அடுத்து எங்கே? |
| Who next ? | - அடுத்து யார்? |
| Who all ? | - யாரெல்லாம்? |
| Where all ? | - எங்கெல்லாம்? |
| Whom then ? | - அப்புறம் என்ன? |

- கேள்வி பதில் தொடரும்...

## ***Riddle about Computer Science***

1. I am a programming language named after a snake, yet I do not slither what am I? **- Python**
2. I can be stored, but not in a file, and I run, but don't have feet what am I? **- A Program**
3. I am a piece of software that organizes & sorts, but you will never, see me working. what am I? **- An operating system**
4. I am a bit of information, but I can be a 'O' or a 'I' what am I ? **- A binary digit (bit)**
5. I can be tested but never touched. what am I ? **- Code**

**K. Shanmathy,** **B.Tech.,CSE.,**

## The words in each proverb are jumbled set them right

1. West or home east is best
   **- East are west, home is best**
2. Year once comes a christma but.
   **- Christmas comes, but once a year.**
3. Flock of the some feather birds together
   **- Birds of the some feather flock together**
4. God proposes man disposes
   **- Man proposes. God disposes**
5. Pound wise and penny foolish
   **- Penny - wise and pound foolish**
6. Master of all trade jack of none is
   **- Jack of all trandes is master of none.**
7. Two bush in the hand is worth in the a bird
   **- A bird in the hand is worth two in the**
8. Do not paul to pay peter rob.
   **- Do not rob peter to pay paul**
9. First desire then deserve.
   **- First doserve, then desire**
10. All that gold is not glitters
    **- All that glitters is not gold**

**P. Poorvaja, V-A**

## BRANCHES OF SCIENCE

| | |
|---|---|
| Study of hearts | - Cardiology |
| Study of the skin | - Dermatology |
| Study of blood | - Haematology |
| Study of liver | - Hepatology |
| Study of fungi | - Mycology |
| Study of algae | - Phycology |
| Study of virus | - Virology |
| Study of kidney | - Nephrology |
| Study of cancer | - Oncology |
| Study of universe | - Cosmology |
| Study of fruit | - Pomology |
| Study of birds | - Ornithology |
| Study of bone | - Osteology |
| Study of earth | - Geology |
| Study of air | - Aerology |

K. Elakkiya

## Chemistry in Everyday life

**1. Vegetables are coloured**

Many vegetable and fruits are strongly coloured because they contain a special kind of chemical compounds named “Carotenoids”

These compunds have an area called “Chromophone”, which absorbs and gives off particular wave lengths of lights, generating the colour.

**2. We cry while cutting onions**

Onions make you cry due to the presence of sulphur in the cells which breaks after the onions are cut. This sulphur gets mixed with moisture and thus irritates your eyes.

**3. Coffee keeps us awake**

Coffee keeps us awake because of the presence of a chemical called adenasine, in your brain, It binds to certain reeptors and slows the nerve cell activity when sleep is signaled.

**பழ. பத்மஸ்ரீ X-C**

# வாழ்க்கை பாடம்

ஒரு நாள் இரண்டு நண்பர்கள் பாலைவனத்தில் நடந்து சென்றார்கள்.

பாதையில் சிறிய சண்டை ஏற்பட்டது. ஒருவன் கோபத்தில் மற்றொருவனை அறைந்தான்.

அதை கோபப்படாமல் தாங்கிய நண்பன் மணலில் எழுதினான்:

"இன்று என் நண்பன் என்னை காயப்படுத்தினார்."

சிலநேரம் கழித்து, அவர்கள் இருவரும் தண்ணீர் குடிக்கச் சென்றார்கள். அப்போது, அறை வாங்கிய நண்பன் திடீரென மணலில் சிக்கிக்கொண்டான். அவனை மற்றொருவன் கஷ்டப்பட்டு காப்பாற்றினான்.

மேலே வந்ததும் அவன் ஒரு கல்லின் மீது எழுதினான்:

"இன்று என் நண்பன் என் உயிரைக் காப்பாற்றினார்."

அதைப் பார்த்து காப்பாற்றியவன் ஆச்சரியமாக கேட்டான்:

"அறைந்ததை மணலில் எழுதினாய், காப்பாற்றியதை கல்லில் எழுதினாய்.. ஏன்?"

அதற்கு நண்பன் சிரித்தவாறே சொன்னான்:

"யாராவது கஷ்டம் தந்தால் அதை மணலில் எழுத வேண்டும். மன்னிப்பு என்னும் காற்று அதை அழித்துவிடும்.

ஆனால் யாராவது நன்மை செய்தால், அதை கல்லில் எழுத வேண்டும். அது ஒருபோதும் அழியாமல் இருக்க!"

**மறப்போம்.. மன்னிப்போம்..**
**நன்றி செலுத்துவோம்...**

**Rtn.DR. N. முரளிதரன்,**
**முதல்வர்**

# பொது அறிவு

1. உலகத்தில் உள்ள கடல்களின் சராசரி ஆழம் எவ்வளவு? - **3730 மீட்டர்**

2. குழந்தைகள் ஒரு நாளைக்கு எத்தனை முறை சிரிக்கின்றனர்? - **300 முறை**

3. Abstemious, Facetious - இந்த இரண்டு சொற்களிலும் உள்ள சிறப்பம்சம் என்ன?

   - A,E,I,O,U என்கிற நான்கு Vowel-களும் வரிசையாக அமைந்துள்ளன.

4. அதிகாலை அமைதி நாடு என்றழைக்கப் படுவது எது? - **கொரியா**

5. 'மணற் கடல்' என அழைக்கப்படுவது எது? - **சகாரா பாலைவனம்.**

**பழ. பத்மஸ்ரீ X-C**

# ரத்த சோகையை
## சரி செய்யும் கறிவேப்பிலை

நீரிழிவால் உண்டாகும் பாதிப்புகளைத் தடுத்து, ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்க கறிவேப்பிலை உதவும்.

குடல் பகுதியின் ஆரோக்கியத்தை அதிகரித்து, குடல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பை கறிவேப்பிலை குறைக்கும் என்கிறது ஆராய்ச்சி முடிவுகள்.

கறிவேப்பிலையின் ஈர்க்குகளைப் பொடியாக்கி சமையலில் சேர்த்து வந்தால் ரத்த சோகை சரியாகும்.

**P. Srilakshmi, B.A.,B.Ed., Teacher**

Over 99% of bacteria die on wooden cutting boards in 3 minutes, but multiply on plastic.

University of Wisconsin research confims wood's natural antibacterial properties, absorbing and killing 99% of bacteria within minutes plastic boards, however harbor microbes in knife grooves. This 1994 study highlights why chefs prioritize wood for food safety despite plastics popularity.

**M. Kousalya, Teacher**

# MATHS PUZZLE

O+O+O+O = 16

△+△+△ = 15

□ + □ + □ + □ = 24

□ + △+ O = ?

**L. Padmini IX-C**



# அன்றாட வாழ்வில் உணவின் இரசாயனங்கள்

பின்வரும் இரசாயனங்கள் உணவுப் பொருட்களில் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன.

1. வண்ணமயமாக்கல் முகவர்கள்
2. செயற்கை பாதுகாப்புகள்
3. ஒட்ட நிலைப்படுத்திகள்
4. பிணைப்பு பொருள்
5. செயற்கை இனிப்பு
6. ஆக்ஸிஜனேற்றிகள்
7. கனிமங்கள்
8. வைட்டமின்கள்

இந்தப் பொருட்களுக்கு வைட்டமின்களைத் தவிர வேறு எந்த ஊட்டச்சத்து மதிப்பும் இல்லை.

**செயற்கைப் பாதுகாப்புகள் :**

அவை நுண்ணுயிரிகளின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் உணவு கெட்டுப் போவதைத் தடுக்கின்றன. உதாரணமாக, சோடியம் பென்சோயேட் மற்றும் சோடியம் மெட்டா பைசல்பேட். செயற்கை இனிப்பு: இந்த பொருட்கள் சிறுநீர் வழியாக வெளியேற்றப்படுவதால் அவை உடலுக்கு எந்த கலோரிகளையும் வழங்குவதில்லை. உதாரணமாக,

**1. அஸ்பார்டேம்:**

இது குளிர் பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம்களில் பயன்படுத்தப்படுகிறது.

**2. அலிடேம்:** இது சுக்ரோஸை விட 2000 மடங்கு இனிமையானது.

**ஆக்ஸிஜனேற்றிகள்:**

அவை உணவின் ஆக்சிஜனேற்றத்தைத் தடுப்பதன் மூலம் உணவு கெட்டுப்போவதைத் தடுக்கின்றன.

உதாரணமாக,


1. பியூட்டிலேட்டட் ஹைட்ராக்சைல்சகிப்புத் தன்மை (BHT)

2. பியூட்டிலேட்டட் ஹைட்ராக்சில் அனிசோல் (BHA) சாயங்கள் என்பவை காகிதம், தோல், ரோமம், முடி, மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு அடி

மூலக்கூறுகளுக்கு வண்ணம் கொடுக்கப் பயன்படும் வண்ண கரிம சேர்மங்கள் ஆகும். சாயங்கள் இயற்கை சாயங்கள் மற்றும் செயற்கை சாயங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**R. Kamala, Vice Principal**



# ‘குழந்தைகளைத் திட்டுங்கள்’ என்கிற தலைப்பில், மனநல ஆய்வியலாளர் ஒருவரின் கருத்து..!



**நா.பிரகதாம்பாள்**
*தாளாளர்*

**இன்றைய** பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை திட்டுவதே இல்லை என்பதை பெருமையாகச் சொல்கிறார்கள். ஆனால், இப்படித் திட்டி வளர்க்கப்படாத பிள்ளைகள்தான், ‘டீச்சர் திட்டினார்’, ‘அம்மா முறைத்தாள்’, ‘அப்பா அடிக்க கையை ஓங்கினார்’ எனச் சின்னச் சின்ன காரணங்களுக்காகத் தற்கொலை வரை செல்கிறார்கள்..

பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் திட்டு வாங்கும் குழந்தைகள், தோல்விகளிலிருந்து தங்களை வேகமாக மீட்டெடுத்துக் கொள்வார்கள்..

தவறு செய்கிற குழந்தைகளைப் பெற்றோர் திட்டித் திருத்துவது, இயல்பான விஷயம். அதனால், உங்கள் குழந்தைகளை வசவுகளுக்குப் பழக்குங்கள்.. அது அவர்களுக்கான மன அழுத்த மேலாண்மை.

‘குழந்தைகளைத் திட்டி வளர்ப்பது அத்தனை நல்ல விஷயமா?’ என்ற கேள்வியை, குழந்தைகள் மனநல மருத்துவர் ஜெயந்தினியிடம் கேட்டோம்..

ஒரு தலைமுறை முன்புவரை நம்மைப் பெற்றோர் திட்டித்தானே வளர்த்தார்கள். டீன்ஏஜ் வயதிலும் பெற்றவர்களிடம் அடி வாங்கி இருக்கிறோமே. அவர்கள் திட்டி சரிப்படுத்தியதால் என்ன குறைந்துவிட்டோம்? நன்றாகத்தானே இருக்கிறோம்?

பிள்ளைகளைப் பெற்றோர்களும் ஆசிரியர் களும் திட்டுவது தங்கத்தைப் புடம் போடுவதற்கு சமம்.

இன்றைய குழந்தைகளுக்கு அறிவுத்திறனும் நினைவுத்திறனும் அபாரமாக இருக்கின்றன. அவர்களைக் கொண்டாடவேண்டிய இடங்களில் கொண்டாடி, குட்டவேண்டிய இடத்தில் குட்டி வளர்த்தால், மிகப்பெரிய சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆவார்கள். அதைவிடுத்து, ‘நான்தான் என் பெற்றோரிடம் வசவும் அடியும் வாங்கி வளர்ந்தேன். என் பிள்ளைக்கு அதெல்லாம் கூடாது’ என இருந்தால், உங்கள் குழந்தை மனதளவில் பூஞ்சையாக இருக்கும். இதுதான் நீங்கள் வேண்டுவதா?

சில நாள்களுக்கு முன்பு, டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழில், ‘அம்மா டி.வி. பார்க்க விடுவதில்லை. ஏன் படிக்கலைன்னு கேள்வி கேட்கிறார். அதனால் அவருக்கு ஒரு லெஸன் டீச் பண்ணணும்னு, ஆரஞ்சு ஜூஸ்ல விஷம் கலந்து தற்கொலை செஞ்சுக்க டிரை பண்ணினேன்’ என்று பள்ளிச் சிறுமி சொல்லியிருக்கிறாள். இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் தெரியுமா?

சிறு வயதிலிருந்து ‘ஏய்’ என்கிற அதட்டல்கூட போடாமல் வளர்த்துவிட்டு, திடீரென்று ‘பிள்ளை கைமீறிப் போகிறதே’ என்ற பயத்தில் தட்டிக் கேட்கும்போது, அவர்கள் மனம் உடைகிறது. அதிர்ச்சியிலும் கோபத்திலும் தவறான முடிவை எடுக்கிறார்கள். அல்லது இந்தச் சிறுமிபோல, பெற்றவர்களையே தற்கொலை என்ற பெயரில் மிரட்டத் துணிகிறார்கள்.

மேலே சொன்ன சிறுமி போல் இல்லாமல், பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் தங்களின் தவறுகளுக்காகத் திட்டு வாங்கும் குழந்தைகள், அவற்றைத் திருத்திக் கொள்வார்கள்.

தங்கள் தவறுகளினால் கிடைக்கும் தோல்விகளிலிருந்து சீக்கிரமே மீண்டு வருவார்கள்.

குழந்தைகளைத் தண்ணீர்போல வளர்க்க வேண்டும். அப்போதுதான் எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு தங்களை அட்ஜஸ்ட் செய்துகொள்வார்கள்.

ஒருவரை அனுசரிப்பது, அவர்களைக் குற்றம் குறைகளுடன் ஏற்றுக்கொள்வது..

அடுத்தவர்களுக்கு விட்டுக் கொடுப்பது..

தன் தவறுக்கு மன்னிப்பு கேட்பது..


மற்றவர்களை மன்னிப்பது..


தான் கேட்பது எல்லாம் கிடைக்கும் என்ற மனப்பான்மையிலிருந்து விடுபடுவது..

போன்ற குணங்களை 5 வயதுக்குள்ளாகவே குழந்தைகளிடம் வளர்ப்பது அவசியம்.

இளஞ்செடியாக இருக்கும்போது வேலி போடுவதுதான் புத்திசாலித்தனம். பிள்ளைகள் மரமான பிறகு வேலியைக் கட்டுவது சுலபமில்லை.

எனவே, ‘அம்மா திட்டுவாங்க; அப்பா திட்டுவாங்க’ என்ற மனநிலையைப் பிள்ளைகளிடம் உருவாக்குங்கள்.





# திருவாரூர் நியூபாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் காலநிலை மாற்றம் (YLACC) இளையோர்களின் பங்கு குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு

**பாரத** சாரண சாரணியர் தேசிய தலைமையகமும் (The Bharat Scouts & Guids, National Head Quarters) உலக பெண்கள் சாரண சாரணியர் அமைப்பு (World Association of GIrld Guides & Girl Scouts) இணைந்து உலக முழுவதும் உள்ள இளைய சமுதாயத்தினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக YLACC (Youth Lead Action on Climate Change) என்ற கருத்தரங்கை (Workshop) நடத்திட July 2023 அன்று YLACC Activities Workshop நடத்த உலக முழுவதும் உள்ள சாரண சாரணியர் அமைப்பு மூலமாக ஏற்பாடு செய்தது.

அதன்படி பாரத சாரண சாரணியர் தேசிய தலைமையகம் YLACC Activities Workshop நடத்த Rovers, Rangers, Unit Leaders, Trainers என சமுதாய சேவையில் அதிக நாட்டம் கொண்டவர்களை இந்தியா முழுவதும் தேர்வு செய்து பாரத சாரண சாரணியர் தேசிய தலைமையகம் புதுடெல்லியில் வைத்து பயிற்சி அளித்தது.

தேசிய தலைமையகத்தில் பயிற்சி பெற்றவர்கள் மூலமாக நாட்டின் பிறபகுதிகளுக்கு YLACC Activities Workshop நடத்த அந்தந்த மாநில தலைமையகத்திற்கு தகவல் அனுப்பியது. அதன்படி திருவாரூர் "நியூபாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளியில்" YLACC Activities Workshop -ஐ பள்ளியின் தாளாளர் திருமதி. N. பிரகதாம்பாள் தொடங்கி வைத்தார்.

பள்ளியின் துணை முதல்வர் திருமதி. S. அருணா முரளிதரன் வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் முதல்வர் முனைவர் N. முரளிதரன் முன்னிலை வகித்து உரையாற்றினார். சர்வதேச சுழற்சங்க திருவாரூர் மிட்டவுடன் சங்கத் தலைவர் திரு. AVC கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார்.

காலநிலை மாற்ற கருத்தரங்கினை தேசிய பயிற்சியாளர் முனைவர் K. சாரண தேவேந்திரன் I.T(S) அவர்கள் காலநிலை மாற்றம் என்றால் என்ன? அது எவ்வாறு பூமியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதற்கு இளைய சமுதாயத்திடம் எவ்வாறு விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். மற்றும் காலநிலை மாற்றத்தால் பெண்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பன போன்ற பல்வேறு செய்திகளை திருவாரூர் நியூ பாரத் பதின்ம மேல்நிலைப் பள்ளி குருளையர்கள் (Clubs), நீலப்பறவையர்கள் (Bulbuls), சாரணர்கள் (Scouts), சாரணியர்கள் (Guids), திரிசாரணர்கள் (Rovers), திரிசாரணியர்கள் (Rangers) மற்றும் அதன் இருபால் ஆசிரியர்களுக்கும் சிறப்பாக பயிற்சி அளித்தார்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட அனை வரையும் பல்வேறு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு Weather, Air, River, Wind, Winter, Tree, Plants, Animals, Clouds, Sunlight, Summer, Water, Earth என பெயர் வைத்து அது தொடர்பாக குழுக்களாக கலந்துரையாடி மேற்படி தலைப்புகளில் குழு வாரியாக பேசினார்.




கருத்தரங்கில் கலந்துகொண்ட Cubs, Bulbuls, Scouts, Guides, Rovers, Rangers அனைவருக்கும் Save our Motherland, Avoid Plastic, Save Water, Save Tree, Plant more Trees, Saver Rivers என்ற தலைப்புகளில் Poster Making மற்றும் Slogam எழுதி குழு வாரயிாக விளக்கமளித்தனர்.

YLACC Activities Workshopல் கலந்துகொண்ட அனைவருக்கும் உலக பெண்கள் சாரண சாரணியர் அமைப்பு (World Association of GIrld Guides & Girl Scouts) YLACC சார்பில் பாரத சாரண சாரணியர் தேசிய தலைமையகம் (Bharat Scouts & Guides, National Head Quarters) சான்றிதழ் மற்றும் பேட்ஜ் வழங்கி பாராட்டினர்.

YLACC Activities Workshopல் கலந்து கொண்ட Cubs, Bulbuls, Scouts, Guides, Rovers, Rangers, Unit Leaders அனைவரும் ஐந்து மரக் கன்றுகளை நட்டு வளர்ப்பதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும் பிளாஸ்டிக் பைகளை முடிந்தவரை தவிர்ப்போம் என்றும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அதன் முதற்கட்டமாக பள்ளி வளாகத்தில் ஐந்து



மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

மேற்கண்ட YLACC Activities கருத்தரங்கினை பள்ளியின் தாளாளர், முதல்வர், துணை முதல்வர் ஆகியோருடன் இணைந்து குருளைய ஆசிரியர் திரு. P. குமரவேலு, சாரண ஆசிரியர் திரு. A. பழனிசாமி, நீலப்பறவையர் ஆசிரியை திருமதி. R. சுதா, Bunny Aunty திருமதி. B.செல்வராணி உள்ளிட்ட பள்ளியின் இருபால் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. ■







# திருவாரூர் தகவல் களஞ்சியம்

குறிப்பு சட்டகம்
முன்னுரை
அமைவிடம்
பெயர் காரணம்
சிறப்புமிகு இடங்கள்
திருவிழாக்கள்
மக்கள் ஒற்றுமை
முடிவுரை

**முன்னுரை –** எங்கள் ஊர் திருவாரூர், பசுவிற்கு நீதி வழங்க தன் சொந்த மகனையே தேரை ஏற்றிக்கொன்ற நீதி தவறாத மனுநீதி சோழன் ஆண்ட இவ்வூரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அமைவிடம் –** திருவாரூர் காவிரி ஆற்றின் படுக்கையில் அமைந்துள்ளது. ஓடம்போக்கி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது திருவாரூர் நகரம்.

**பெயர்க் காரணம் –** ஆரூர், ஆர்+ஊர்+ ஆர்+ஆத்தி, ஆத்தி மரங்கள் நிறைந்த ஊராக இருந்ததால் ஆரூர் என்று பெயர் பெற்றது. பிறகு திரு சேர்க்கப்பட்டு திருவாரூர் என்று மாறியது.

**தொழில்கள் –** இந்நகரில் வேளாண்மைத் தொழில் முதன்மைத் தொழிலாக உள்ளது. நெல், கரும்பு உற்பத்திக்கு பெயர் பெற்றது.

**சிறப்புமிகு இடங்கள் –** இந்தியா மற்றும் ஆசியாவிலேயே மிகப்பெரிய தேரான திருவாரூர் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோவில், ஸ்ரீ ராஜகோபால சுவாமி, வடுவலர் பறவையகம் முதலியவை சிறப்புமிகு இடங்கள் ஆகும்.

**திருவிழாக்கள் –** சித்திரை மாதத்தில் தேர் திருவிழா, தெப்பத் திருவிழா, தைப்பூசத் திருவிழா மற்றும் மகாசரஸ்வதி அம்மன் கோவில் நவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

**மக்கள் ஒற்றுமை –** இங்கு பல்வேறு மதத்தினர் அமைதியாய் ஒற்றுமையாய் வாழ்வதைக் காணலாம்.

**முடிவுரை –** கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த ஊரில் வாழ்வது எனக்குப் பெருமை.

“பிறந்தாலும் பேர் சொன்னாலும் முக்தி தரும் தலம் திருவாரூர்.”

நன்றி!

**S. Anish Fathima, Teacher**


முன்னாள் பொருளாளர் அமரர். S.மாணிக்கம் M.A., அவர்களின் படத்திறப்பு விழா
மாணவ, மாணவியர்களுக்கு பரிசளிப்பு விழா
சாதனையாளர்களுக்கு விருது விழா மற்றும்
மருத்துவர் சமுதாய மகா
இடம் : ஹோட்டல் அஃப்னா பார்க்,
ஜக்காரியா A.C ஹால், திருநெல்வேலி




TEACHES









TEACHES

TEACHES


Thiruvarur, Tamil Nadu, India










NEW BHARATH






He alone
TEACHES


RUNNER UP
CONGRATULATIONS
U-14 BOYS
TEAM TIRUVARUR


WINNER
CONGRATULATIONS
U-14 GIRLS
TEAM TIRUVARUR


19th STATE FLOORBALL CHAMPIONSHIP
KANCHIPURAM
2ND RUNNER UP
CONGRATULATIONS






Thiruvarur, Tamil Nadu, India


Thiruvarur, Tamil Nadu, India






# புற்றுநோயை விரட்ட வீடு தேடிவரும் நவீன பஸ்

**இந்தியாவில்** ரோட்டரி சங்கம் 1920-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் பல ரோட்டரி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. ரோட்டரி சங்கங்கள் பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்களின் நலனுக்காக உழைக்கின்றன. அவை கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உள்ளூர் சமூக மேம்பாடு போன்ற பல துறைகளில் சேவைகளை வழங்குகின்றன,

வறுமையில் வாடும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல், உற்பத்தி வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பின் தங்கிய சமூகங்களில் வறுமையை குறைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றன. மேலும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்துதல், நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்குதல். மருத்துவ உபகரணங்களை வழங்குதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

## தொழில்துறை மேம்பாடு

இளைஞர்களுக்காக இன்ட்ராக்ட் மற்றும் ரோட்ராக்ட் (போன்ற அமைப்புகளை உருவாக்கி, தலைமைத்துவம் மற்றும் தொழில்முறை மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன. மரம் நடுதல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. உள்ளூர் அமைப்புகள் மற்றும் சமூக வலைப்பின்னல்களுடன் இணைந்து செயல்பட்டு, சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுகின்றன. சில கிளப்புகள் ஆன்-லைனிலும் கூட்டங்களை நடத்தி, சேவைத் திட்டங்களை செயல்படுத்துகின்றன. அந்த வகையில் பல்வேறு சேவைகளை பன்னாட்டு ரோட்டரி மாவட்டம் 2011 செயலாற்றி வருகிறது. இந்த ரோட்டரி மாவட்டத்தின் கீழ் தஞ்சை, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர் மாவட்டங்களும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் புதுச்சேரி, காரைக்கால் மாவட்டங்கள் என மொத்தம் 7 மாவட்டங்களை உள்ளடக்கியது. இந்த மாவட்டத்தில் 10 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. இதில் 6.200 உறுப்பினர்கள் உள்ளனர்.

## ரூ.1.90 கோடியில் நவீன பஸ்

இந்த ரோட்டரி மாவட்டம் மருத்துவ முகாம் மற்றும் கண் பரிசோதனைக்கு முக்கியத்துவம் அளித்து செயலாற்றி வருகிறது. பல்வேறு சேவைகளை ஆற்றிவரும் பன்னாட்டு ரோட்டரி மாவட்டம் 2891 தற்போது புது முயற்சியாக பெண்களுக்கு புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, பரிசோதனையும் மேற்கொள்ள உள்ளது. இதற்காக நடமாடும் பஸ். அதில் நவீன உபகரணங்கள், பரிசோதனைக்கு தேவையான வசதிகள் என ரூ. 1 கோடியே 90 லட்சம் செலவில் இந்த பஸ் வாங்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் ரோட்டரி மாவட்டத்துடன் இணைந்து புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆஸ்பத்திரியும் இணைந்து மேற்கொள்கிறது. நடமாடும் பஸ்சை வாங்கிய ரோட்டரி மாவட்டம். இதனை புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில் ஒப்படைத்து பரிசோதனை மற்றும் விழிப்புணர்வை இணைந்து மேற்கொண்டு வருகிறது.

## அர்ப்பணிப்பு

இந்த வாகனம் வாரத்தில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை புதுசேரியிலும்,

சனி, ஞாயிறுக்கிழமை கிராமம் மற்றும் நகரப் பகுதிகளுக்கு சென்று விழிப்புணர்வு மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளும். ஒரு நாளைக்கு 40 பேருக்கு பரிசோதனை மேற்கொள் ளப்படுகிறது பரிசோதனை முடிவில் நோய் அறிகுறிகள் ஏதும் தென்பட்டால் அதற்கு உரிய சிகிச்சை புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத் துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப் படும். தமிழக அரசு வழங்கும் முதல்-அமைச்ச ரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் மூலம் இந்த சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் பஸ் பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி கும்பகோணத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் ரோட்டரி சங்கம் மற்றும் மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி சார்பில் உரிய குழுக்கள் அமைக்கப்பட்டு பரிசோதனைகளை ஆகஸ்ட் மாதத்தில் இருந்து தொடங்குகின்றன. 2024-25-ம் ஆண்டுக்கான ஆளுனராக பாஸ்கர் பணியாற்றினார். 2025-2026-ம் ஆண்டின் ஆளுனராக கும்பகோணத்தை சேர்ந்த வியோன் பொறுப்பேற்றுள்ளார். இந்த நிகழ்ச்சியில் இந்த பஸ் பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## 75-ம் ஆண்டில் அடியெடுத்து வைப்பு

மேலும் முன்னாள் ரோட்டரி ஆளுனர் பாலாஜி சார்ந்துள்ள 74 வருடம் பாரம்பரியமிக்க கும்பகோணம் ரோட்டரி சங்கத்தின் சார்பில் கும்பகோணத்தில் ரோட்டரி ரத்த வங்கி, ரோட்டரி டயாலிசிஸ் சென்டர், ஆரஞ்ச் விஷன்சென்டர், ஆம்புலன்ஸ் சர்விஸ் ஆகியவை செயல்பட்டு இந்த ஆண்டு 2-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது குறிப்பிடத்தக்கது.

## மார்பக-கர்ப்பப்பை வாய் புற்றுநோய் அறிகுறிகள்

புற்றுநோய் என்பது உடலில் உள்ள அசாதாரண செல்கள் கட்டுப்பாடு இல்லாமல் வளரும் ஒரு நோயாகும். இந்த புற்று நோய் செல்கள் உடலின் மற்ற பகுதிகளுக்கும் பரவும். பெண்களுக்கு ஏற்படும் புற்று நோய்களில் பொதுவான புற்று நோயான மார்பகம் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஆகும். இவற்றை ஆரம்ப கட்டத்தில் அறிந்து கொண்டால் முற்றிலும் குணப்படுத்த வாய்ப்புள்ளது. மார்பக புற்று நோய் என்பது திசுக்களுக்கு குறிப்பிட்ட புற்று நோய் வகை. யார், யார் மார்பக புற்று நோய் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றால் 40 வயதுக்குமேல் உள்ள பெண்கள் கண்டிப்பாக பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். குடும்பத்தில் மார்பக புற்றுநோய் இருப்பவர்கள் முதல் குழந்தையை 50 வயதுக்கு பிறகு பெற்றவர்கள், பாலூட்டாத பெண்கள் பரிசோதனை செய்ய வேண்டும்.

மார்பகத்தில் வீக்கம், கட்டி அல்லது சிவந்து காணப்படுதல். மார்பக தோலில் மற்றும் சுருக்கம், அடர்த்தி, காம்பில் சீழ், ரத்தசுரப்பு. மார்பு வடிவம் அல்லது அளவில் மாற்றம் இதன் அறிகுறிகள் ஆகும். 40 வயதிற்கு பிறகு ஆண்டுக்கு ஒரு மேம்மோகிராம் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மாதம் ஒருமுறை சுய பரிசோதனை செய்ய வேண்டும். சீரான உடற் பயிற்சி மற்றும் ஆரோக்கியான உணவு பழக்க வழக்கங்களை கடைபிடிக்க வேண்டும்.


கர்ப்பப்பை புற்றுநோய் என்பது பெண்களின் கர்ப்பப்பை வாய்ப் பகுதியில் ஏற்படும் புற்று நோய் ஆகும். இது அதிகமாக வைரஸ் காரண மாக ஏற்படுகிறது. திருமணமான பின்னர் 21 வயதுக்குமேல் 65 வரை வரை உள்ளவர்கள், எச்.பி.வி வைரஸ் தாக்கம் உள்ளவர்கள், கர்ப்பப் வாய் புற்றுநோய் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

மாதவிடாய் அல்லாத வேளைகளில் ரத்த கசிவு ஏற்படுதல் மற்றும் நீண்ட கால மாதவிடாய், பாலுறவின்போது வலி அல்லாத ரத்தக்கசிவு ஏற்படுதல், நாள்பட்ட அடி வயிற்று வலி, சிறுநீர் பாதையில் ஏற்படும் தொந்தரவு அல்லது சிறுநீர் வெளியேற்ற தடை, ஈரப்பதம். துர்நாற்றம் மற்றும் வெள்ளைப்படுதல் போன்றவை அறிகுறிகள் ஆகும். இதனை தடுக்க எச்.பி.வி, தடுப்பூசி இளம்பெண்களுக்கு 9 முதல் 25 வயதுக்கும் எடுத்துகொள்ள வேண்டும். பாலுறவின்போது பாதுகாப்பு அவசியம். 21 வயதுக்குமேல் 65 வயதுள்ள பெண்கள் எந்த அளவுக்கு அறிகுறிகள் இல்லையென்றாலும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாப்ஸ்மியர் என்ற பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால், கர்ப்பப்பை வாய் புற்று நோயை தடுத்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

அறுவை சிகிச்சை, கீமோதெரபி சிகிச்சை, ரேடியேஷன் சிகிச்சை, ஹார்மோன் சிகிச்சை போன்றவை மேற்கொள்ள வேண்டும். இதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் முழுமையாக குணப்படுத்தலாம். ஒவ்வொரு பெண்ணும், ஆண்டிற்கு ஒருமுறை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். சிகிச்சை முறையை டாக்டர் நோயின் நிலையை பொருத்து தீர்மானிப்பார்.

# நடமாடும் பஸ்சில் உள்ள மருத்துவ சேவைகள்

ரோட்டரி மாவட்டத்தின் நடமாடும் பஸ்சில் பல்வேறு மருத்துவ சேவைகள் இடம் பெற்றுள்ளன. அதன்படி மேம்மோகிராபி. அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், பேப்ஸ்மியர் பரிசோதனை மற்றும் கர்ப்பப் பை வாய் புற்று நோய் நோக்கும் சுருவி மற்றும் டாக்டர்கள் ஆலோசனை இடம்பெறுகிறது. இதில் பெண் களுக்கு அதிக விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, ஆரம்ப கட்டத்தில் புற்று நோய் உள்ளதா? என கண்டறியப்படுகிறது. மேலும் வாழ்க்கை காக்கும் சிகிச்சைக்கு வழிகாட்டுவதோடு, மருத்துவ நிபுணர்கள், மகப்பேறு மற்றும் மகளிர் நல டாக்டர் மற்றும் கதிரியக்கவியல் நிபுணர்களும் சிகிச்சை அளிக்க உள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் இந்த முகாம்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




# 2 ஆயிரம் பேருக்கு இலவசகண் அறுவை சிகிச்சை



மகளிருக்கான புற்றுநோய் பரிசோதனை, விழிப்புணர்வுக்கான நடமாடும் பஸ்திட்டமானது 2021-22-ம் ஆண்டில் ரோட்டரி ஆளுளராக பாவாஜி பணியாற்றிய காலத்தில் அவரின் பெரு முயற்சியால் விண்ணப்பிக்கப்பட்டு, ரோட்டரி அறக்கட்டளை நிதி உதவி பெறப்பட்டு தற்போது இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் அதே 2021-22-ம் ஆண்டில் 3 லட்சம் அமெரிக்க டாலர்கள் ரோட்டரி அறக்கட்டளையிடம் இருந்து பெறப் பட்டு புதுச்சேரி, கடலூர், பண்ருட்டி, நெய்வேலி, காட்டுமன்னார்கோவில், காரைக்கால், மயிலாடுதுறை, கும்ப கோணம், திருவையாறு, பட்டுக் கோட்டை, திருவாரூர். திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி, நாகப்பட் டினம் உள்ளிட்ட 16 நகரங்களில் கண்சிகிச்சை மையங்கள் புதுச்சேரி) ஜோதி கண் சிகிச்சை மையம் மற்றும் திருச்சி மகாத்மா கண் ஆஸ்பத்திரி யுடன் இணைந்து தொடங்கி ரூ.50 சலுகை கட்டணத்தில் செயல்பட்டு வருகிறது.

மேலும் மாதந்தோறும் சர்க்கரை நோயாளி களுக்கு இலவச முகாம், ஏழைகளுக்கு இலவச சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு இலவச கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.



கொடியினை நட்டவளே துடிப்பாய் செயல்பட்டாய்
நம்பிக்கை தளராமலே தரணியிலே
விடுதலை விதைத்தாய்!

-வேலுநாச்சியார்






டாக்டர். அருணா முரளிதரன்

துணை முதல்வர்

நியூபாரத் பதின்ம மேல்நிலைப்பள்ளி

37 - புதுத்தெரு, திருவாரூர் - 610001



பள்ளிக்கு
வருகைபுரிந்த
மாவட்ட
ஆட்சியருக்கு
பள்ளி சார்பாக
வரவேற்பு



திருநெல்வேலி மாவட்ட டீம் சங்கம் சார்பில் திருவாரூர் நியூபாரத் பள்ளி முதல்வர்
திரு. டாக்டர். நா. முரளிதரன் அவர்களுக்கு வீரத் தியாகி விஸ்வநாததாஸ் சாதனையாளர் விருது




பள்ளி
முதல்வருக்கு
கல்விச் செம்மல்
விருது